விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 242 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 01 வெள்ளிக்கிழமை (18.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வவுனியாவில் நீரில் மூழ்கி இரு மாணவர்கள் மரணம்

### விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கச் சென்றபோது விபரீதம்



(வவுனியா)

வவுனியா தெற்கு வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கச் சென்ற இரண்டு 15

## வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா பல்லைக்கழக துணைவேந்தர் மீது தாக்குதல் சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா தெற்கு பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட விளையாட்டுப் போட்டிகள் வவுனியா பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பங்குபற்றச் சென்ற இரு மாணவர்கள் மைதானத்துக்கு அருகில் இருந்த நீர்க்குழியில் விழுந்து உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்தை அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியாப் 15

## தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு இன்று கொடியேற்றம்



10

# குருந்தூரில் சிவன் ஆலயம்

### இந்து - பௌத்த அமைப்புக்கள் கூட்டாக அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் சிவாலயமொன்றை நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இந்து - பௌத்த அமைப்புகள் சில கூட்டாக அறிவித்துள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

### 'பௌத்தர்களே எழுந்திருங்கள்'

## பொங்கலுக்கு எதிராக சுவரொட்டிகள்

(முல்லைத்தீவு)

குருந்தூர்மலை ஐயனார் கோவிலில் இன்றைய தினம் தமிழர்களின் பொங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளநிலையில் இதற்கு எதிராக 15

## கிளிநொச்சியில் குளத்திலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாதன் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள சிறிய குளம் ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீன் பிடிக்க சென்ற 46 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே தொழிலில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்துள்ளார்.

திடீரென ஏற்பட்ட வலிப்பு நோய் காரண 15

### யாழ்.மாவட்ட செயலகத்தில்

## நாளை மாபெரும் தொழிற் சந்தை

(யாழ்ப்பாணம்)

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்டத் தொழில் 15

## வவுனியாவில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

### முல்லை குருந்தூர்மலை

# ஆதிசிவன் ஐயனாருக்கு இன்று பொங்கல்

### அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு

(முல்லைத்தீவு) முல்லைத்தீவு குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் இன்றைய தினம் பொங்கல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கலைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை

### நீதிமன்று அதிரடி உத்தரவு

(முல்லைத்தீவு)

குருந்தூர்மலை பொங்கலைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை என முல்லை நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

குருந்தூர்மலை பிரதேசத்தில் உள்ள தொல்பொருள் சின்னங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் 04

## 'பொங்கலில் கடைப்பிடிக்க வேண்டியவை' தொல்லியல் திணைக்களம் நிபந்தனை

(முல்லைத்தீவு)

பொங்கல் உற்சவத்தினை மேற்கொள்ளும் தமிழர் தரப்பு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் எழுத்துமூல ஆவணம் ஒன்றினையும் வழங்கியுள்ளது.

இந்த ஆவணத்தில் ஏழு நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. நிலம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு - பாதிப்பு ஏற்படாதவாறு தொல்லியல் துறை அதிகாரிகள் குறிப்பிடும் திறந்தவெளியில் தொல்பொருள் அல்லாத கல், செங்கல், மணல் போன்ற ஆதரவின் மீது இரும்புத் தகடு வைத்து அதன் மீது தொல்பொருள் அல் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி **அஜந்தினி காந்தராஜா**
அவர்களின் பாசமிகு மாமியார்

அமரர் **திருமதி**


**இரா்சமணி கணபதி**

அவர்கள் இறைபதமடைந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அவரது
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை**
(16745)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378, 076 097 3127**

# 5TH MR.NORTHERN 2023
## BODY BUILDING & FITNESS CHAMPIONSHIP
## வடமாகாண ஆணழகன் போட்டி



*To be held at*

Date : 19.08.2023 (Saturday)
Venue : Saraswathy Hall
(A1 Rajah Cream House)
(37, Sir.Pon - Ramanathan Road, Jaffna)
Time : 03.30 Pm - 08.30 Pm

*Thanks For Coming*

(16751) **Administration - JDBBFA**

# விசேட பொதுக்கூட்டம் தொடர்பான அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டமானது எதிர்வரும் 28.10.2023ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு "ஆதாரம்" இளைப்பாறும் மண்டபத்தில் நடைபெறும். அக்கூட்டத்தில் நடைமுறையிலுள்ள யாப்பு விதியின்படி கீழே குறிப்பிட்ட பிரிவுகள் திருத்தியமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**01.திருத்தப்படவுள்ளது.**

பிரிவு 7.1

**அங்கத்துவம் தொடர்பானது.**

வருடாந்த சந்தாப்பணம் நூறு ரூபாவும் (100.00) ஆயுள் சந்தாப்பணம் இரண்டாயிரம் ரூபாவும் (ரூபா 2000.00) செலுத்தி அங்கத்துவம் (உறுப்புரிமை) பெறமுடியும்.

**திருத்தம்**

ஆயுள் சந்தாப்பணம் இரண்டாயிரம் ரூபா (2000.00) செலுத்தி அங்கத்துவம் பெற முடியும்.

**02.திருத்தப்படவுள்ளது.**

பிரிவு 1.2

சங்கத்தின் சகல அதிகாரங்களும் அதியுயர் சபையான பொதுச்சபைக்கே பாரப்படுத்தப்பட்டுள்ளது. வருடாந்த ஆயுள் சந்தா செலுத்தி உறுப்புரிமை பெற்றுக் கொண்ட அனைவரையும் பொதுச் சபை கொண்டிருக்கும்.

**திருத்தம்**

ச்ங்கத்தின் சகல அதிகாரங்களும் அதியுயர் சபையான பொதுச் சபைக்கே பாரப்படுத்தப்பட்டுள்ளது. ஆயுள் சந்தா செலுத்தி உறுப்புரிமை பெற்றுக் கொண்ட அனைவரும் ஒரு வருடம் பூர்த்தி செய்த பின்னரே பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க முடியும்.

**03.திருத்தப்படவுள்ளது.**

பிரிவு 12.1

வருடாந்த பொதுச் சபைக் கூட்டம்

நிதியாண்டு முடிவுற்ற மூன்று மாதங்கள் நிறைவு பெற முன்பு வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் கூட்டப்படல் வேண்டும். அவ்வாறு பதவியிலுள்ள நிர்வாகம் பொதுக் கூட்டத்தை கூட்டத் தவறுமிடத்து வைத்திய அத்தியட்சகர் (பணிப்பாளர்) கூட்டத்தை கூட்டமுடியும்.

**திருத்தம்**

நிதியாண்டு முடிவுற்ற மூன்று மாதங்கள் நிறைவு பெற முன்பு வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் கூட்டப்படல் வேண்டும். அவ்வாறு பதவியிலுள்ள நிர்வாகம் பொதுக் கூட்டத்தை கூட்ட தவறுமிடத்து கரைச்சி பிரதேச செயலாளரினால் கூட்டத்தை கூட்டமுடியும்.

**யாப்பு விதியில் இணைக்கப்பட வேண்டியது**

நலிவுற்ற நோயாளர்களுக்கு எம்மால் வழங்கப்படும் மருத்துவ உதவிகள் யாவும் எமது ஆயுட் கால அங்கத்துவர்கட்கும் வழங்கப்படல் வேண்டும்.

யாப்பு விதி தொடர்பாக தங்களின் ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 27.09.2023ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**நோயாளர் நலன்புரிச் சங்கம்.**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**கிளிநொச்சி**
(C-7089)

உ

# அருள் மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்
## திருவண்ணை
## கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
## இராஜகோபுர திருப்பணி

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் சோபகிருது வருடம் ஆவணித் திங்கள் முதலாம் நாள் (18.08.2023) வெள்ளிக்கிழமை காலை 7.35 மணி தொடக்கம் 9.05 மணிக்குள் வரும் சுப வேளையில் அழகிய தித்தள இராஜகோபுரம் நிர்மாணிப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற திருவருள் கூடியுள்ளது. அடியார்கள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு இத் திருப்பணிக்கு தங்களாலியன்ற பங்களிப்பை நல்கி அம்பாளின் கிருபா கடாட்சம் பெற்றுய்ய வேண்டுகிறோம்.
(16748)

தொடர்புகளுக்கு
**021 222 5770**

**தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்**

# அரைக்கும் ஆலை இயந்திரங்கள் பொருத்துவதற்கான கூறு விலை கோரல்

யாழ்.மாவட்டச் செயலகத்தால் கரவெட்டிப் பிரதேச செயலகம் ஊடாக எமக்கு வழங்கப்பட்ட அரைக்கும் ஆலை இயந்திரங்களைப் பொருத்தி இயங்கு நிலையில் தருவதற்குப் பொருத்தமானவர்களிடமிருந்து கூறு விலைகள் வரவேற்கப்படுகிறது.

அமைவிடம் மற்றும் இயந்திரங்களை நேரடியாகப் பார்வையிட்டு 31/08/2023ம் திகதிக்கு முன்னதாக அரைக்கும் ஆலைக்கான கூறு விலை எனும் தலைப்பிட்டும் மூடி முத்திரையிட்டும், தலைவர், கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் எனும் முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத் தபாலிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தலைவர்**
**கலாநிதி க.யோகராசா**
**கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம்**
**கரவெட்டி.**

**021 226 3263**
(C-7085)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாதத்திற்கு மட்டுமே நெல் இருப்பு உள்ளது

## நெல் சந்தைப்படுத்தல் சபை

**(கொழும்பு)**

**ஒரு மாதத்திற்கும் குறைவான காலப்பகுதிக்கான நெல் கையிருப்பு மாத்திரமே தம்வசம் உள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.**

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தற்போது 45 இலட்சம் கிலோகிராம் நெல் மாத்திரமே கையிருப்பில் உள்ளதாக சபையின் தலைவர் புத்திக்க இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

நெல் கிடைக்காத காரணத்தினால் மூடப்பட்டுள்ள அம்பாந்தோட்டை நெல் களஞ்சியசாலை, விவசாய அமைப்புகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் திறப்பது தொடர்பில் ஆராயப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அமைச்சர் மஹிந்த அமரவீர அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் இன்று கலந்துரையாடலொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக்க இத்தமல் கொட தெரிவித்துள்ளார். (4)

# அடிப்படை அறிவற்றவர்களே 13 ஐ எதிர்க்கின்றனர்

## அமைச்சர் ஹரீன்

(கொழும்பு)

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க முடியாது. அதை முழுமையாக அமுல்படுத்தியே தீர வேண்டும்.

அடிப்படை அறிவற்ற பாராளுமன்ற உறுப்பினர்களே 13 இற்கு எதிராகப் போர்க் கொடி தூக்குகின்றனர் என அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த மக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க படிப்படியாக நிறைவேற்றி வருகின்றார். அதே போல் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் முழுமையாக அமுல்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

இந்நிலையில், 13 தொடர்பில் முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து முட்டி மோதுவதை ஆளும் - எதிரணி எம்.பிக்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்." எனத் தெரிவித்தார். (4)

# இலங்கைக்கு பல துறைகளில் சீனா ஆதரவு வழங்கும்

## சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதி

(கொழும்பு)

இலங்கையின் நிதிக் கடன் சவால்களை திறம்பட கையாள்வதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக சீனா மீண்டும் தெரிவித்துள்ளது.

சீனாவின் யுனான் மாகாணத்தில் நடைபெற்று வரும் 7 ஆவது சீன தெற்காசிய கண்காட்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்த போதே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவின் வெளிவிவகார ஆணைக்குழு வின் பணிப்பாளர் வான் யீ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இறைமை, சுதந்திரம் மற்றும் தேசிய பெருமையை பாதுகாப்பதற்கு சீனா பலமாக ஆதரவளிப்பதாகவும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைக்கு நிரந்தர ஆதரவு மற்றும் கடினமான காலங்களில் பயனுள்ள ஆதரவு அளித்தமைக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தனது நன்றியை இதன் போது தெரிவித்தார். (4)

# கடல் சார் கண்காணிப்பு விமானத்தை இலங்கைக்கு வழங்கியது இந்தியா

(கொழும்பு)



77ஆவது சுதந்திர தினத்தை நினைவுகூரும் வகையில், இந்தியா தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் சாகல ரத்நாயக்கவிடம், டோர்னியர்-228 என்ற கடல் சார் கண்காணிப்பு விமானத்தை இந்தியா உத்தியோக பூர்வமாக கையளித்துள்ளது.

ஒரு வருடத்திற்கு முன்னர் இலங்கைக்கு கையளிக்கப்பட்ட டோர்னியர்-228 விமானம் வருடாந்த பராமரிப்புக்காக இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட நிலையில், அதற்காக மாற்று கண்காணிப்பு விமானமே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு புதுடில்லியில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற்ற இருதரப்பு பாதுகாப்பு கலந்துரையாடலின் போது, இந்தியாவில் இருந்து டோர்னியர் ரகத்திற்கு இணையான கடல்சார் கண்காணிப்பு விமானங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டது.

இதன் பிரகாரம் இந்த விமானத்தை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கட்டுநாயக்காவில் உள்ள இலங்கை விமானப்படைதளத்தில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தலைமையில் இடம்பெற்றது. (4)

# இந்தி மற்றும் சீன மொழிகளை மாணவர்கள் கற்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் எடுத்துரைப்பு

(கொழும்பு)

மாறிவரும் உலகிற்கு ஏற்ப எதிர்காலத்தில் இலங்கையில் உள்ள பிள்ளைகள் இந்தி மற்றும் சீன மொழிகளைக் கற்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தெரிவித்துள்ளார்.நேற்று முன்தினம் புதன் கிழமை நுகேகொடையில் உள்ள அனுல வித்தியாலயத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் கல்வியானது எதிர்காலத்திற்கு ஏற்றவாறு பாரியளவில் மாற்றமடைய வேண்டும். நாம் புதிய பாடங்களை அறிமுகப்படுத்த வேண்டும். மாறிவரும் உலகிற்கு ஏற்றவாறு நமது பிள்ளைகள் ஆங்கிலத்துடன் கூடுதலாக சீன மற்றும் இந்தியையும் கற்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4)



திக்கம் துளாய் இளைஞர் சனசமூக நிலைய கட்டடம் நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

(படம்- மகாலிங்கம்)

# 15 மாவட்டங்களுக்கு பவுசர்கள் மூலம் குடிநீர் விநியோகம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் நாடளாவிய ரீதியில் 15 மாவட்டங்களுக்கு பவுசர் மூலம் குடிநீர் விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய வறட்சியான கால நிலையினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1இலட்சத்து 90 ஆயிரத்தை எட்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# வெளிப்பொறிமுறையை ஏற்கப் போவதில்லை

## அலிசப்ரி திட்டவட்டம்

(கொழும்பு)

மனித உரிமை விவகாரங்களிற்கு தீர்வை காண்பது தொடர்பில் இலங்கை எந்தவொரு வெளிப்பொறிமுறையையும் ஏற்றுக்கொள்ளாது என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரிஇராஜதந்திர சமூகத்தினருக்கு மீண்டும் தெளிவாக தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகளின் மனித உரிமை பேரவையின் அமர்வு அடுத்தமாதம் இடம்பெறவுள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.




காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் மூலமும் ஏனைய அமைப்புகள் மூலமும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து நான் தெளிவுபடுத்தியுள்ளேன் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்து கொழும்பை தளமாக கொண்ட இராஜதந்திரிகளுக்கு எடுத்துரைத்துள்ளதாக தெரிவித்துள்ள அவர் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் காணப்படும் முன்னேற்றங்கள் குறித்தும் தெளிவுபடுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் குழாமில் வியாஸ்காந்த்



சீனாவில் நடைபெற வுள்ள ஆசிய விளையாட் டுப் போட்டிகளில் விளையா டவுள்ள 19 பேர் கொண்ட இலங்கை கிரிக்கெட் அணியில் யாழைச் சேர்ந்த வியாஸ்காந்த் பெயரிடப்பட் டுள்ளார்.

மேலும் ஐக்கிய அரபு இராச்சி யத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.எல்.டி 20 தொடரிலும் வியாஸ் காந்த்விளையாடவுள் ளார்.

ஐ.எல்.டி 20 தொடரின் மும்பை இந்தியன்ஸ் நிர் வாகத்துக்கு சொந்தமான எம்.ஐ.எமிரேட்ஸ் அணியில் இவர் விளையாடுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள் ளார்.கடந்த ஆண்டு எல்.பி. எல் தொடரில் திறமையை வெளிப்படுத்தியிருந்த இவர், தொடரின் சிறந்த வளர்ந்து வரும் வீரராக தெரிவு செய் யப்பட்டிருந்தார்.

இரண்டாவது தடவை யாக ஏற்பாடு செய்யப்பட் டுள்ள ஐ.எல்.டி 20 தொடர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள் ளது. (4-6)

## மகளிர் உலகக் கிண்ண கால்பந்து
# இங்கிலாந்து- ஸ்பெயின் அணிகள் இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை

பெண்களுக்கான உலகக் கிண்ண கால்பந்து தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூ சிலாந்து நாடுகளில் நடை பெற்று வருகிறது.



சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற முதல் இரண்டு காலிறுதி ஆட்டங்களில் நெதர் லாந்தை வீழ்த்தி ஸ்பெயின் அணியும், ஜப்பானை வீழ்த்தி சுவீடன் அணியும் அரை யிறுதிக்கு முன்னேறின.

முதல் அரையிறுதி போட்டி யில் ஸ்பெயின் மற்றும் சுவீடன் அணிகள் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் ஸ்பெயின் அணி 2-1 என்ற அடிப்படையில் ஸ்வீடனை வீழ் த்தி முதல் முறையாக இறுதி போட்டிக்கு முன்னேறியது.

அந்த வகையில் 2023 மகளிர் கால்பந்து உலக கிண்ண தொடரின் இரண்டாவது அரை யிறுதி போட்டியில் அவுஸ் திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதின.

இந்த போட்டியில் 1-3 என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணி அமோக வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு முன்னேறி இருக்கிறது. இதன நாளை மறுதினம் நடைபெற இருக்கும் இறுதி போட்டியில் ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. (4)

# உலகக் கிண்ண கிரிக்கெட்
## இங்கிலாந்து அணி அறிவிப்பு

50 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட் போட்டி தொடர் ஒக்டோபர் 5 முதல் நவம்பர் 19 வரை இந்தியாவில் நடை பெறவுள்ளது.

இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, தென்ஆபிரிக்கா, நியூசிலாந்து, பங்களாதேஷ், ஆப்கானி ஸ்தான், இலங்கை, நெதர் லாந்து ஆகிய 10 நாடுகள் பங் கேற்கின்றன.

அகமதாபாத்தில் நடை பெறும் உலக கிண்ண போட்டி யின் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியன் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்திய அணி முதல் ஆட்டத்தில் அவுஸ் திரேலியாவை ஒக்டோபர் 8ஆம் திகதி சென்னையில் சந்திக்கிறது.

இந்நிலையில்; உலக கிண்ண தொடருக்கான தற் காலிக இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஒருநாள் கிரிக் கெட் போட்டியிலிருந்து ஓய்வை அறிவித்த பென் ஸ்டோக்ஸ் தற்போது அந்த முடிவை திரும்பப் பெற்றுள்ளார் . இத னால் பென் ஸ்டோக்ஸ் உலக கிண்ண தொடருக்கான இங்கி லாந்து அணியில் இடம்பெற் றுள்ளார்.

இங்கிலாந்து அணியின் நட்சத்திர பந்துவீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர், பேட்ஸ்மேன் ஹாரி ப்ரூக் அணியில் இடம்பெறவில்லை. கப்டன் ஜோஸ் பட்லர் , மொயீன் அலி, கஸ் அட் கின்சன், ஜானி பேர்ஸ்டோவ், சாம் கரன், லியாம் லிவிங்ஸ்டன், டேவிட் மலான், அடில் ரஷித், ஜோ ரூட், ஜேசன் ராய், பென் ஸ்டோக்ஸ், ரீஸ் டாப்லி, டேவிட் வில்லி, மார்க் வுட், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் இடம்பெற்று ள்ளனர். (4)


# மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 09 - 1940



மறைவு 17 - 08 - 2023

## சிதம்பரப்பிள்ளை செல்வராசா
### ( ஓய்வுபெற்ற கட்டட பட வரைஞர் )

கேசரி வீதி, தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை செல்வராசா அவர்கள் 17.08.2023 வியாழக் கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - முத்தாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வமலர் அவர்களின் அன்பு கணவரும் செந்தூரன்(அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம், வடக்கு மாகாணம்), வனஜா, பார்த்தூரன்(பொறியியல் உதவியாளர், திட்ட செயலகம் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, யாழ்ப்பாணம்), மதுஜா (ஆசிரியர், கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி), Dr.மாதூரன்(பிரதேச வைத்திய சாலை, மண்டைதீவு), கிரிஜா(மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் மற்றும் உஷாந்திகா(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, உரும்பிராய்), குகானந்தன்(உரிமையாளர்-சிறிகுகன் பான்சி, யாழ்ப்பாணம்), கஜவதனி (சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்கியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்), குகன் (பொது சுகாதார பரிசோதகர், கரைச்சி MOH) ஆகியோரின் அன்பு மாமனாரும் மற்றும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், செல்வபூரணம், அன்னபூரணம், சரஸ்வதி, செல்வரட்ணம், தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் செல்வராசா, மகாதேவன் ஆகியோரின் மைத்துனரும் பிருந்துஜன், துசாந்தன், ஆர்த்திகன், பிரனீஸ், லிபீஸ், அதித்திரி, ஆதினி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2023) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தையிட்டி இந்து மயானத்திற்கு (ஆவளை) எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.

தகவல் - குடும்பத்தினர் [illegible]

(16752)


### பொங்கலை...

பூசை வழிபாடுகளை மேற்கொள்வ தற்கு அப்பிரதேச மக்களுக்கு உள்ள உரிமையை தடுப்பதற்கு வவுனியா சப்புமல்கஸ்கட ரஜமகா விகாரை விகா ராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரரு க்கோ அல்லது அவருடன் வரும் குழுவி னருக்கோ அல்லது அருண் சித்தார்த் என்பவருக்கோ அல்லது அவருடன் வரும் குழுவினருக்கோ அல்லது இதற்கு பாதகம் செய்யும் பிரிவினருக்கோ எந்தவிதமான அதிகாரமும் இல்லை என முல்லைத்தீவு நீதிமன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

2023.08.16 அன்று முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் தொல்பொருள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஆர். ரி. ஜெயதிலகவினால் செய்யப்பட்ட முறைப் பாட்டின் அடிப்படையில் குருந்தூர்மலை யில் இன்று பொங்கல் இடம்பெற்றால் அங்கு வரும் குழுவினருக்கிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு, அந்த கருத்து முரண்பாடு உணர்ச்சிகரமான விடயங் கள் என்பதால் மதக்கலவரமாக உருவாகி உயிர் ஆபத்து ஏற்படுத்தக்கூடும்.

எனவே அந்த இடத்தின் அமைவிடத் தின் அடிப்படையில் அவ்வாறான ஒரு கலவரத்தை தடுப்பதற்கு மிகவும் கடினமா கும் என தெரிவித்து வழக்கு தொடுனர் சார்பில் முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அமரசிங்கவினால் 2023.08.16 அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நீதிபதி ரி. சரவணராஜா முன்னிலையில் AR/1028/23 எனும் வழக்கில் அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் தாக்கல் செய்து குற்றவியல் நடைமுறை கோவை பிரிவு 106 (01)கீழ் பொங்கல் வழிபாட்டுக்கு எதிராக தடை உத்தரவை கோரியுள்ள னர்.

இருப்பினும் இன்று குருந்தூர் மலை பிரதேசத்தில் உள்ள தொல்பொருள் சின்னங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பூசை வழிபாடுகளை மேற் கொள்வதற்கு அப்பிரதேச மக்களுக்கு உள்ள உரிமையை தடுப்பதற்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை என முல்லைத்தீவு நீதிமன்று கட்டளை பிறப்பித்துள்ளது. (ம-7)

### ஆதிசிவன்...

பொங்கல் நிகழ்வில் அனைத்து தரப்பினரையும் பங்குபற்றுமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது.

இதேவேளை இன்றைய பொங்கல் நிகழ்வை குழப்ப பௌத்த பிக்குகள் பிரயத்தனம் மேற்கொள்ளலாம் என்ப தால், பல தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் நிகழ்வாக இன்றைய பொங்கல் நிகழ்வு மாறியுள்ளது.

இன்றைய பொங்கல் நிகழ்வை நடத்த தமிழர்கள் அழைப்பு விடுத்துள்ள நிலையில், அதற்கு எதிராக பௌத்த இனவாத பிக்குகளும் சிங்கள மக்களை அங்கு ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுத் தனர்.

இந்த நிலையில் நேற்று மாலையே பல பேருந்துகளில் தென்பகுதியிலிருந்து பிக்குகளும், பொதுமக்களும் ஆலய பகுதிக்கு வந்துள்ளனர்.

இந் நிலையில் குருந்தூர்மலையில் இன்றைய தினம் இன மோதல் ஏற்ப டாலம் என்ற அச்சநிலை தோன்றியு ள்ளது.

இதனையடுத்து குறித்த பகுதியில் பொலிஸ் மற்றும் அதிரடிப் படையினர் பாதுகாப்பிற்காக குவிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்முறையைத் தூண்டுவோருக்கு சிறைச்சாலைதான் வாழ்க்கை

## அமைச்சர் டிரான் அலஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

மக்கள் மத்தியில் வன்முறையைத் தூண்டும் வகையில் கருத்துக்களை அள்ளி வீசி அரசியல் செய்பவர்களுக்குச் சிறைச்சாலை வாழ்க்கைதான் பரிசாகக் கிடைக்கும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் சட்டத்தை மீறி அரசியல்வாதி உள்ளிட்ட எவரும் செயற்பட முடியாது. சட்டங்களைச் சவாலுக்குட்படுத்தி எவரும் கருத்துக்களையும் வெளியிட முடியாது.

இன வன்முறையை - மத வன்முறையைத் தூண்டும் வகையில் எவரும் செயற்படவும் முடியாது.

சிலர் சட்டத்தை மதிக்காமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார்கள். அவர்களுக்குச் சிறைச்சாலை வாழ்க்கைதான் பரிசாகக் கிடைக்கும்." என தெரிவித்தார். (4)

# மறைந்தும் மனங்களில் வாழும் தனியார் கல்வியுலகின் பேராசான்கள்



நா.கிருஸ்ணானந்தன் (பொருளியல்)


என்.ரி.தரன் (இந்து நாகரீகம்)


அருள்நங்கை (இந்து நாகரீகம்)



பசில் ஜெனதாஸா (வணிகக்கல்வி)


மகாதேவா (இரசாயனவியல் )


கருணாகரன் (பொருளியல்)


அன்பழகன் (புலமைப்பரிசில்)


வெக்ரர் வேலாயுதம் (இணைந்த கணிதம்)


நாகரட்ணம் (இரசாயனவியல்)


பாஸ்கரன் (கணிதம்)


கியுபேட் ஆனந்தராஜா (அரசறிவியல்)

தனியார் கல்வியுலகில்
பெரும் சரித்திரம் படைத்து
அமரத்துவமடைந்த இவர்களையும்
இந்நாளில் நினைவு கோருகின்றோம்

(சி-7082)

சென்றன ஆண்டுகள் 9

18.08.2023




வரதராஜன் சகுந்தலா
(20.01.1951 - 20.05.2018)
(பொருளியல் சிறப்புக்கலைமானி
பேராதனைப் பல்கலைக்கழகம்)

தமிழ்த் தேசியப்பற்றாளர்
**சின்னத்துரை வரதராஜன்**
(07.12.1951 - 18.08.2014)
(ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசான், முன்னாள் விரிவுரையாளர், பொருளியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், ஆலோசகர், யாழ்.ஏய்ட் அறக்கட்டளை, கலிங்கம் பல்சுவை இதழ்)

# இராசிபலன்


18.08.2023
ஆவணி 01, வெள்ளிக்கிழமை
துதியை முன்னிரவு 7.30 மணிவரை


பூரம் முன்னிரவு 11.12 மணிவரை
சுபநேரம் -6.05-7.35 மணிவரை
இராகுகாலம்-10.35-12.05 மணிவரை

சந்திராஷ்டமம்-
திருகோணம்,
அவிட்டம்.

**வளவன்**



**மேஷம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.


**ரிஷபம்** வழிபாடு ஆனந்தம் தரும், பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.


**மிதுனம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.



**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


**சிம்மம்** ஆழ்ந்த சிந்தனையுண்டு, அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணம் கைகூடும், குடும்ப பொறுப்புகள் கூடும் நாள்.


**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும், தொழில் நலன் கருதிய இட மாற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, சுபவிரயங்கள் கூடும் நாள்.



**துலாம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும்.


**விருச்சிகம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.


**தனுசு** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வீண்பழிகள் அகல நடவடிக்கை எடுப்பீர்கள்.


**மகரம்** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது.


**கும்பம்** புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடிவரலாம், இனிமையான அனுபவங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


**மீனம்** அலுவலகப் பணிகள் துரிதமாகும், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள் தவறுகளிலிருந்து நீங்களே பாடம் கற்றுக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படங்கள்: சிவசாந்தன். மகாலிங்கம்)

# இசை ஆராதனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அன்பு உலகம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் உலக அமைதிக்கான தொடர் இசை ஆராதனை மற்றும் செயற்றிட்டங்கள் தொடக்க விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கொக்குவில் மாத்தனை கந்த சுவாமி ஆலய மண்டபத்தில் பிரம்ம ஸ்ரீ க. இலட்சுமண சர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (4)

# இனந்தெரியாத நபர்களால் மோட்டார்சைக்கிள் தீக்கிரை



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரசடி-தாமோதரம் பிள்ளை வீதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வேளையில் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

பெண்கள் தனித்திருந்த வீடொன்றின் முன் வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

## "திறன் குறைந்தோருக்கு"

# சாரதி அனுமதிப்பத்திர வாய்மொழிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எழுதுதல், வாசித்தல் திறன் குறைந்தவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான வாய்மொழிப் பரீட்சை, யாழ்ப்பாண மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துப் பரீட்சையில் இரண்டு தடவைகள் தோற்றி சித்தியடையத் தவறிய யாழ்ப்பாண மாவட்டத்தினைச் சேர்ந்த பரீட்சார்த்திகள், பிரதேச செயலகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று கிராம சேவை அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட எழுதுதல், வாசித்தல் திறன் குறைந்தவர் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன்யாழ்ப்பாண மாவட்ட மோட்டார்வாகன போக்குவரத்து திணைக்களத்தில் தமது விபரங்களை முற்பதிவு செய்து வாய்மொழிப் பரீட்சைக்கு தோற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்சேதமடைந்த தெளிவற்ற வாகன அடிச்சுட்ட இலக்கங்களை மீளப்பொறித்தல் தொடர்பான நடவடிக்கைகளும் குறித்த தினங்களில்நடைபெறவுள்ளன.

தேவைப்பாடு உடைய பொது மக்கள், தமது மோட்டார்வாகன பதிவுச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் யாழ்ப்பாண மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் தமது விபரங்களை முற்பதிவு செய்து வாகன அடிச்சட்ட இலக்கங்களை மோட்டார்வாகன போக்குவரத்து திணைக்கள யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தில் மீளப் பொறித்துக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# நல்லூர் உற்சவ பஜனையில் கலந்து கொள்ளுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப்பெருமான் மஹோற்சவ காலத்தில் நடத்தப்படுகின்ற பஜனை நிகழ்வு, வழமை போல இம்முறையும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில்,ஸ்தாபக ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளின் வழிகாட்டலில் இடம் பெறவுள்ளது.

இப்பஜனை நிகழ்வில் பங்கு பற்றி நல்லைக் கந்தப்பெருமானின் திருவருளைப் பெற வருமாறு பாடசாலை மாணவர்களையும் அறநெறிப் பாடசாலை மாணவர்களையும் முருகப் பெருமான் அடியவர்களையும் சிவகுரு ஆதீனம் அழைக்கின்றது.

எனவே அதில் பங்குபெற விரும்புகின்ற ஆர்வலர்களும் இல 692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் அல்லது 077 222 0103 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு சிவகுரு ஆதீனம் கேட்டுக் கொண்டுள்ளது. (4-6-33)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் உரும்பிராய் ஆரம்ப சுகாதார மருத்துவ பிரிவில் இடம் பெறவுள்ளது.

அதேபோன்று உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாமும் அன்றையதினமே காலை 9 மணி தொடக்கம் உடுவில் ஆரம்ப சுகாதார மருத்துவ பிரிவிலும் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரைசத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-6)

# நெடுந்தீவுப் பகுதியில் இளைஞரைக் காணவில்லை

## பொலிஸில் முறைப்பாடு

(அராலி)

நெடுந்தீவு பகுதியில் இளைஞர் ஒருவரைக் கடந்த 11 ஆம் திகதி முதல் காணவில்லை என்று நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

27 வயதுடைய தம்பிப்பிள்ளை விதுஷன் எனும் மன நலம் குன்றிய இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

வீட்டிலிருந்து மதிய உணவினை உட்கொண்டு விட்டு சென்ற பின்னரே அவர் காணாமல் போயுள்ளார்.

இதேவேளை 14 ஆம் வட்டாரத்தில் அன்றைய தினம் கட்டப்பட்டிருந்த தெப்பம் ஒன்றும் காணாமல் போயுள்ளது. குறித்த தெப்பத்தில் இளைஞர் வெளியேறியிருக்கக்கூடும்எனவும் பொலிஸாரால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து கடற்படை ஏனைய பொலிஸ் நிலையங்கள் உள்ளிட்ட அனைத்திற்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைப்பவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்கும்படியும் நெடுந்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (4-6-104)



யாழ்ப்பாணம் மாதகல் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் 143 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று காலை நடைபவனியும் வாகன பேரணியும் முன்னெடுக்கப்பட்டன.


(படம்: கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யா/மாதகல் சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை 143 ஆவது ஆண்டு விழா சிறப்பு மலர் 1880-2023

### பாடசாலை வரலாறு

மாதகல் பெண் பிள்ளைகளின் கல்விக்காக 1880 இல் றோமன் கத்தோலிக்கத் திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்ட யா/ மாதகல் சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அன்று முதல் 1995 வலிகாம இடப்பெயர்வு வரை திருக்குடும்ப சபைக் கன்னியர்களின் நிர்வாகத்தில் இயங்கியது. ஆரம்பத்தில் தரம் எட்டு வரையான வகுப்புகளும் பின்னர் 1948 இலிருந்து தரம் 10 வரையான வகுப்புகளும் நடத்தப்பட்டன. 1960 இல் அரசால் பொறுப்பேற்கப்பட்டதன் பின்னர் 1972 இல் அரசின் தரப்படுத்தல் திட்டத்தினால் தரம் 5 வரை வகுப்புகள் குறைக்கப்பட்டன. ஆரம்பத்தில் இங்கு ஆண்பிள்ளைகள் தரம் 3 வரை மட்டுமே கற்க அனுமதிக்கப்பட்டனர். 1973 இலிருந்து தரம் 5 வரை ஆண்பிள்ளைகளும் கற்று வருகின்றனர். 1992.08.20 இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது இங்கு 330 மாணவர்கள் தரம் 1 - 5 வரை கற்றனர். 1992 மூன்றாம் தவணை முதல் வலிகாம இடப்பெயர்வு வரை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வளவில் கொட்டகை அமைத்து தனது செயற்பாடுகளை முன்னெடுத்தது. 1996.06.17 தொடக்கம் மாதகல் மண்ணில் ஏனைய பாடசாலைகளுடன் இணைந்து இயங்கியது. தனது தனித்துவத்தைப் பேணுவதற்காக 1998.03.02 முதல் சொந்தக் கட்டடத்தில் 21 மாணவர்களுடன் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துத் தொடர்ந்து பல பௌதிக வளங்களையும் பெற்று. மாணவர் தொகையில் உயர்ந்து சிறப்புடன் இயங்கி வருகிறது. தற்போதைய அதிபரினதும் பழைய மாணவர்களினதும் முயற்சியினால் மக்களின் நிதிப்பங்களிப்பில் மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டு இன்று 143 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் திறந்து வைக்கப்படுகின்றது.





### யாழ். ஆயரின் ஆசிச்செய்தி

யா/மாதகல் சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 143 ஆம் ஆண்டு நிறைவைக் காணும் இவ்வேளையில் புதிய மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டுத் திறப்பு விழாக் கொண்டாடும் இன்றைய நாளில் வெளிவரும் பத்திரிகைச் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பல இடர்கள். இன்னல்கள். இடப்பெயர்வுகளைக் கண்ட போதும் பணியாற்றிய அதிபர்கள். ஆசிரியர்கள். உறுதுணையாக நின்ற பாடசாலை நலன்விரும்பிகளின் சாதுரியமான முன்னெடுப்புக்களால் இந்தப் பாடசாலை இன்று வரை இயங்கி உயர்வினை அடைகின்றது. பௌதிகவள அபிவிருத்தி மட்டுமல்லாது கற்றல் செயற்பாடுகள். இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் பாடசாலை அபிவிருத்திப் போக்கில் பயணிப்பது பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்தவர்கள். இன்றும் உழைக்கின்ற தற்போதைய அதிபர். ஆசிரியர்கள். உள்நாட்டு. வெளிநாட்டு பழைய மாணவர்களுக்கு எனது நன்றியினையும் பாராட்டினையும் கூறி நிற்கின்றேன். உங்களது ஆக்கபூர்வமான செயற்பாடுகள் தொடரவும் இந்தப் பாடசாலை மென்மேலும் வளர்ந்து மாணவர்களின் வாழ்வுதனை உயர்த்துகின்ற சமூகத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் தொழிற்படவும் வாழ்த்தி இறையாசீர் கூறி நிற்கின்றேன்.

**கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,**
**பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்,**
**யாழ்.ஆயர்.**



### வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பெண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக 143 வருடங்களின் முன் ஆரம்பிக்கப்பட்ட மாதகல் சென்.தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலையானது தற்போது தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புகளைக் கொண்ட வகை III பாடசாலையாகத் திகழ்கின்றது.

புதிய கட்டடத் திறப்பு விழாவினையும் 143 ஆவது ஆண்டு நிறைவு விழாவினையும் கொண்டாடும் இன்றைய நாளில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த அதிபர்கள். ஆசிரியர்கள். மாணவர்கள். நலன்விரும்பிகள் அனைவரையும் பாராட்டுவதுடன் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற இறை ஆசியை வேண்டி. பாராட்டி மனதார வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.ம.பற்றிக் டிறஞ்சன், செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**



### வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மாதகல் சென்.தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவினையும் 143 ஆவது ஆண்டு நிறைவு விழாவினையும் முன்னிட்டு வெளியிடப்படும் பத்திரிகைச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

இப்பாடசாலை எமது வலயத்தின் சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் அமைந்துள்ள வகை III பாடசாலை ஆகும். இலங்கையில் கல்வி ஒளியைப் பரப்பும் நோக்கில் கிராமங்கள் தோறும் கத்தோலிக்க மிஷனரிமார்களால் ஆரம்பிக்கப்பட்ட இத்தகைய பாடசாலைகளாலேயே ஏழை மாணவர்கள் பலரும் கற்றறிந்தோராக மாற்றங்காணும் நிலை ஏற்பட்டது.

சிறப்பான வெளியீட்டினைக் கொண்டிருந்த இப்பாடசாலை இடப்பெயர்வின் பின் மாணவரின் எண்ணிக்கையில் குறைவடைந்தது துரதிஷ்டமே. தற்போது பழைய மாணவர்கள். நலன்விரும்பிகளின் ஒத்துழைப்புடன் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளது. பாடசாலைச் சமூகம் எடுக்கும் 143 ஆவது ஆண்டு விழாவும் திறப்பு விழாவும் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.க.ஜெ.பிறட்லி,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம்.**



### பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி

வடபுலத்தின் கல்விப் பாரம்பரிய பழைமைக்கு ஒரு சாட்சியாக நிமிர்ந்து நிற்கும் யா/மாதகல்சென்தோமஸ்றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை வலிகாமம் கல்வி வலயத்தின் ஒரு நம்பிக்கை நட்சத்திரமே. மாதகல் மண்ணில் பெண்களுக்கான கல்வி விதையைத் தூவி அண்மைக்காலம் வரை அவர்களின் வளர்ச்சியில் கண்ணாக இருந்து பணியாற்றிய திருக்குடும்ப சபைக் கன்னியரைப் பாராட்டுகின்றேன்.

வரப்புயர நீருயர்வது போல கல்வி என்னும் வரப்பு உயர்ந்த காரணத்தினால் சமூக வாழ்க்கைத்தரம் என்னும் நீர் உயர்ந்து அதன் கனிகளை இன்று அறுவடை செய்கின்றோம். இன்றைய சிறுவர்கள் துணிவும் ஆற்றலும் மிக்கவர்களாக நவீன தொலைத்தொடர்பு சாதன மாயைகளுக்குள் சிக்கி மாளாது நேர்த்தியான கல்விப் பண்பாட்டினூடே பயணிக்க இப்பாடசாலையானது மாணவச் செல்வங்களை வழிநடத்த வாழ்த்தி. பெற்றோர். தம் பிள்ளைகளைக் கண்காணித்து ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க இறையாசீர் கூறி நிற்கின்றேன்.

**அருட்பணி செ.றோய் பேடினன்,**
**பங்குத்தந்தை, மாதகல்.**



### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யா/மாதகல் சென். தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலை பழைய மாணவர்கள் சங்கத்தினரால் பாடசாலையின் 143 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு வெளியீடு செய்யும் பத்திரிகைச் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வலிகாமம் கல்வி வலயத்தில் மாதகல் சென் தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலை கல்விச் செயற்பாட்டில் நீண்ட பல வரலாற்றுச் சாதனைகளைக் கொண்டமைந்த பாடசாலையாக விளங்கி வருவதை யாவரும் அறிவர். கடந்த 143 வருடங்களாக பல்வேறு வகையில் மாணவியருக்கு கல்விப் போதனையை வழங்கி வரும் பாடசாலை. அவர்களின் அறிவு. திறன் போன்றவற்றுடன் சிறந்த ஒழுக்க விழுமியங்களையும் கற்பித்து உயரிய பண்பினை உடைய மாணவ சமுதாயத்தினை உருவாக்கிய வகையில் தனது பணியை திறம்பட ஆற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக" என்னும் வள்ளுவனின் வாக்குக்கு அமைய கற்ற தகுதிக்கு ஏற்ப நல்லொழுக்க விழுமியங்களைப் போற்றும் வகையில் இப்பாடசாலை மாணவர் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதும் கல்லூரித் தாயின் 143 ஆவது வருட நிறைவினை முன்னிட்டு விழா எடுப்பதுவும் இதனை நெறிப்படுத்தும் அதிபர். ஆசிரியர்கள். பழைய மாணவர்கள் என அனைவரையும் பாராட்டி மலரும் 143 ஆவது வருட பத்திரிகைச் சிறப்பிதழ் சிறப்புடன் மலர என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.அம்பலவாணர் சிவபாலசுந்தரன்,**
**அரசாங்க அதிபர் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**



### பழைய மாணவர்சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் கல்வி வலயத்தில் கல்விச் செயற்பாட்டில் பல நீண்ட வரலாற்றுச் சாதனைகளைக் கொண்டு விளங்கும் மாதகல் சென். தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவினையும் 143 ஆவது ஆண்டு நிறைவு விழாவினையும் இன்று கொண்டாடி மகிழும் இந்த வேளையில் பழைய மாணவர் சங்கச் செயலாளர் என்ற வகையில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலை 1880 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 143 ஆண்டு கால கல்விப் பயணத்திலே பல கல்விச் சாதனைகளைத் தன்னகத்தே கொண்டு மாதகல் கிராமத்தில் மிடுக்கோடு நிமிர்ந்து நிற்கும் பாடசாலையாக இருப்பதும் பாராட்டுக்குரியதாகும். மாணவர்களை சகல மட்டங்களிலும் அறிவு. ஆற்றல். திறன்களை வெளிப்படுத்தும் வகையில் வரலாற்றுப் பதிவுகளை நிறுவி வருவதும் பாடசாலைக்குச் சூட்டும் மணிமகுடங்களாகும்.

143 ஆவது ஆண்டு விழாக் காணும் இந்த வேளையில் பாடசாலைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளதும் பாடசாலை வரலாற்றில் மகத்துவமானதாகும். பாடசாலையின் கல்வியின் புகழ் மேலும் ஓங்க பழைய மாணவர் சங்கம் சார்பாக எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

**திரு மா.ஜெறாட்**
**செயலாளர், பழைய மாணவர் சங்கம்,**



### இந்து மத குருவின் ஆசிச் செய்தி

யா/மாதகல் சென். தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 143 ஆவது ஆண்டு நிறைவில் பழைய மாணவர்கள். நலன்விரும்பிகள். பெற்றோர். ஆகியோரின் பங்களிப்புடனும் ஒத்துழைப்புடனும் ஒரு புதிய மாடிக் கட்டடத்தை அமைத்து திறந்து வைக்கும் இன்றைய நாளில் பத்திரிகைச் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

செம்பின் மினுக்கத்தை மறைக்கும் செழும்பை புளி. மணல் கொண்டு நீக்குவது போல ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயற்பாடுகள் மூலம் மாணவரின் அறியாமையை நீக்கி அறிவைக் கொடுக்கும் இடமே பாடசாலை ஆகும். இப்பாடசாலை பல துறைகளிலும் வெற்றிநடை போட்டு சாதனைகள் படைக்கவும் சிறந்த சமுதாயத்தினை உருவாக்கவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**சிவஸ்ரீ செ.சுந்தரேஸ்வரசர்மா,**
**ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம்,மாதகல்.**



### வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மாதகலில் கல்விச் சேவை புரியும் யா/மாதகல் சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையானது ஒழுக்கமும் திறமையும் உடைய பெண்களை உருவாக்குவதற்காக 1880 ஆம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இப்பாடசாலையானது இருபாலாருக்குமுரிய வகை III பாடசாலையாக சிறப்புடன் இயங்கி பல சாதனைகளைப் புரிந்து வருகிறது.

இன்று நடைபெறும் 143 ஆவது ஆண்டு விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களின் பலத்தையும் சாதனைகளையும் பெருமையுடன் கொண்டாட ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. அவர்கள் தமது பாடசாலைத் தாயில் வைத்துள்ள அன்பையும் மதிப்பையும் வெளிக்காட்டியுள்ள இவ்வேளையில் அவர்கள் பணி மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

**திரு தி. யோண் குயின்ரஸ்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,வடமாகாணம்.**



### அதிபரின் வாழ்த்துச் செய்தி

புதிய கட்டடத் திறப்பு விழாவினையும் 143 ஆவது ஆண்டு நிறைவு விழாவினையும் ஒருங்கே இன்று கொண்டாடி மகிழும் யா/மாதகல் சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் அதிபராக மகிழ்ச்சி அடைகின்றேன்.ஆரம்பப் பாடசாலையானாலும் தமது கல்வியை ஆரம்பித்து வைத்த பாடசாலையின் வளர்ச்சியில் ஆர்வமும் பற்றும் கொண்டு நிதியுதவி. சரீர உதவி புரிந்த அனைவரையும் பாராட்டுகின்றேன்.

ஒன்றிணைந்த செயற்பாட்டிற்கு ஓர் உதாரணமாக எமது பாடசாலையின் புதிய கட்டடம் நிமிர்ந்து நிற்கின்றது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்பான சேவையினை வழங்கிய அதிபர்கள். ஆசிரியர்கள் அனைவரையும் நினைவுகூருகின்றேன். தொடர்ந்தும் எமது பாடசாலை அபிவிருத்திப் பாதையில் பயணிக்கட்டும்.

**திருமதி. றமணி ஜெயந்தன்.**



### பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யா/மாதகல் சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுச் செயலாளர் என்ற ரீதியில் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

143 ஆவது வருட நிறைவையும் புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழாவையும் கொண்டாடும் இன்றைய நாளில் புதிய கட்டடத்திற்கு நிதிப் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். தொடர்ந்தும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு எம்மாலியன்ற உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் நல்குவோமென உறுதி கூறுகின்றேன். இறைவனின் அருட்கரம் என்றும் எம்முடன் இருந்து எம்மை வழிநடத்துவதாக. பாடசாலை. கல்வியிலும் ஏனைய செயற்பாடுகளிலும் முன்னேறி மேலும் பல வெற்றிகளைப் பெற்று வளர்ச்சியடைய வாழ்த்துகிறேன்.

**திரு.வே.லெபோண் ஜெயதாஸ், செயலாளர்.**

(16739)

**மலரமைப்பு:**
**பழைய மாணவர் சங்கம்,**
**யா/மாதகல் சென்தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 182

# நான் நெகிழ்ந்த தருணம்

தெரு ஓரமாக என் வாகனத்தை நிறுத்திவிட்டு, பொருட்கள் வாங்கிக் கொண்டு காரை நோக்கி நடந்து வந்து கொண டிருந்தேன்.

அப்போது ஒரு பெரியவரும் வீதிக் கடவையைக் கடந்து கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்திருக்கிறேன். தர்பூசணியை வண்டியில் வைத்து கூறுபோட்டு விற்பவர். சில சமயம் பலாப்பழம் விற்பவர்

வண்டி அருகில் அவர் மனைவி அமர்ந்திருந்தார். மனைவிக்கும் தனக்கும் காலை உணவினை எதிரில் இருக்கும் சிறு ஹோட்டலில் வாங்கிக் கொண்டு வீதிக் கடவையினை கடந்து வரும் வேளை, ஒரு ஸ்கூட்டர் வேகமாக வந்து அவரருகில் திடீரென்று பிறேக் போட்டு நின்றது.

ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டு வந்தது இளம்பெண். கோபத தோடு முகம் சிவக்க, அந்தப் பெரியவரை கடுமையான சொற்களால் திட்டிவிட்டு, வேகமாகச் சென்று விட்டார்.

என்ன தான் தவறு அந்தப் பெரியவர் மீது இருந்தாலும் அவ்வளவு மரியாதை குறைவாக அந்தப் பெண் திட்டி இருக்க வேண்டியதில்லை. ஸ்கூட்டர், அருகில் வந்து சட்டென்று நின்ற அதிர்ச்சியில்,அவர் வாங்கி வந்த உணவுப் பொட்டலமும் கீழே விழுந்து விட்டது.

முகத்தில் வருத்தத்துடன் உணவு பொட்டலங்களை குனிந்து எடுத்துக் கொண்டு தன் கடையை நோக்கிச் சென்றார். மறுநாள் அந்த முதியவரிடம் பலாச்சுளைகளை வாங்குவதற்காக சென்றிருந்தேன்.

எனக்குச் சுளைகளை கவரில் வைத்துக் கொடுக்கும் போது கூட, தெருவையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தார். யாரையோ எதிர்பார்த்துக் கொண்டு.

அதே பெண் தூரத்தில் ஸ்கூட்டரில் வருவதை பார்த்ததும் ஒரு நிமிஷம் சார் என்று என்னிடம் கூறிவிட்டு வந்து கொண்டிருந்த பெண்ணை நிறுத்தச் சொல்லி கையசைத்தார்.

அந்த இளம் பெண்ணும் முகத்தில் சற்று கலவரத்தோடு நேற்று திட்டியதற்கு சண்டை போடப் போகிறாரே? என்று வண்டியை நிறுத்திவிட்டு, என்ன? என்று கோபமாகக் கேட்டாள்.

நான் கூட நேற்று நடந்ததற்கு ஒரு சத்தம் போடப் போகிறார் என்று தான் நினைத்தேன்.

ஆனால் நடந்தது மனதை நெகிழ வைத்தது. "தாயி, நேற்று போன அவசரத்தில் இதை தவற விட்டு விட்டு போய் விட்டாய்" என்று விலையுயர்ந்த செல்போனை தன் மடியில் இருந்து எடுத்துக் கொடுத்தார். அந்த இளம்பெண்ணுக்கு பேச்சே வரவில்லை.


வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு "ஐயா இந்த செல்போனை தொலைத்ததில் இருந்து நிம்மதியே இல்லை. நான் பேங்கில் பணிபுரிபவள். முக்கியமான நம்பர்ஸ் எல்லாம் இதில்தான் இருக்கிறது. மிக்க நன்றி" என்று கூறிவிட்டு கண் கலங்கினாள்.

நேற்று அவ்வளவு அவமரியாதையாக பேசி இருக்கக் கூடாது. வேலைப் பழுவால் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசிவிட்டேன் என்று கைகூப்பினாள். அட விடு தாயி. எல்லாருக்கும் கோபம் வருவதுதான். இதைப் பற்றிக் கவலைப்படாமல் ஜாக்கிரதையாக போ தாயி என்று அன்போடு அனுப்பி வைத்தார். அந்த முதியவரை நேற்று அப்படி திட்டிய பெண்ணை, நாலு வார்த்தை கேட்டிருக்கலாமே என் றேன்.

சின்னப் பொண்ணு சார். இன்னும் கல்யாணம், காட்சி, குழந்தைன்னு ஆலவிருட்சமா வாழ வேண்டிய பொண்ணு சார். வயசாயி பக்குவம் வந்தா எல்லாம் சரியாயிடும். எனக்கு பேர்த்தி வயசு. என் பேர்த்தியா இருந்தா சண்டை போடுவேனா? நல்லா இருக்கட்டும்தம்பி. இருக்கிற வரைக்கும் அன்பா பாசமா இருந்துட்டு போவேமே என்றார்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# டில்லி விமான நிலையத்தில் 5 கிலோ தங்கம் பறிமுதல்



(டில்லி)

டில்லி விமான நிலையத்தில் உஸ்பெகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு மறைத்து கொண்டு வந்த ஐந்து கிலோ தங்கத்தை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இது தொடர்பாக மூன்று பெண்கள் உட்பட 8 உஸ் பெகிஸ்தானியர்களை அதி காரிகள் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து 5,319 கிராம் எடை கொண்ட 50 தங்க சங்கிலிகள் பறி முதல் செய்யப்பட்டன. இதன் மதிப்பு 2.92 கோடி ரூபாய் ஆகும்.

தற்போது விமான நிலையத்தில் உள்ள லக்கேஜ் டிராலியில் தங்கத்தை கடத் துவது அதிகரித்து வருவ தாக அதிகாரகிள் தெரிவித்த னர்.

இது தொடர்பான மேல திக விசாரணை களை அதி காரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (4-5)

# ஆபிரிக்க ... புகலிடக் ...

## 63 பேர் உயி...

(கேப் வெர்டே) புகலிடக் கோரிக்கை... சென்ற படகொன்று மே... வெர்டே கடலில் நிர்க்க... உயிரிழந்துள்ளனர்.

சிறுவர்கள் உட்பட 38 பேர் பாது காப்பாக மீட்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது. ஒரு மாதமாக கடலில் நிர்க்கதிக்கு உள்ளாகியி ருந்த குறித்த படகில் இருந்தவர் களில் பெரும்பாலானவர்கள் செனகல் நாட்டை சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்படுகின்றது.

# தேவாலயங்கள் மீ... 100 இற்கும் மேற்...

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தேவால யங்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர் பில் 100 இற்கும் மேற் பட்டோர் கைது செய்யப் பட்டுள்ளனர் என பஞ்சாப் மாகாண உள்துறை ஊடகப் பேச்சாளர் கூறிய தாக ஜியோ செய்தி நிறு வனம் தெரிவித்துள் ளது.

பாகிஸ்தான் பைசலா பாத்தில் உள்ள ஜரன் வாலா மாவட்டத்தில் அண் மையில் ஒருவர் மத நிந் தனையில் ஈடுபட்டதாக முறைப்பாடு எழுந்தது.

அதையடுத்து அவர் வசிக்கும் பகுதியிலுள்ள தேவாலயங்கள் மீது ஆர்ப் பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான படங்கள், செய் திகள் வெளியாகியதை யடுத்து சம்பவம் தொடர்

பாகிஸ்தானில் பரப...



# புவி வெப்பமயமாதலை ஆராய நாசாவால் புதிய திட்டம் அறிமுகம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் விண் வெளி ஆராய்ச்சி நிறுவன மான நாசா மற்றும் தனி யார் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான ரொக்கெட் லேப் ஆகியன இணைந்து புவி வெப்பமயமாதல் குறித் தான ஆராய்ச்சிகளை ஆரம் பித்துள்ளன.

இவ்வகையில், உலகின் பனிக்கட்டி கண்டங்களான ஆட்டிக் மற்றும் அண்டாட் டிகாவில் தனது சோதனை மையங்களை நிறுவி வெப்ப இழப்பு குறித்து கண்கா ணித்து வருகிறது.

இந்த நிலையில் அதன் மேம்பட்ட நடவடிக்கையாக துருவ பிரதேசங்கள் மேல் செயற்கை கோள்கள் ஏவி துல்லிய கணிப்புகளை பெற வுள்ளது.

ஆட்டிக் மற்றும் அண் டாட்டிகாவில் இருந்து புவி எந்த அளவு தனது வெப் பத்தை இழக்கிறது என்பதற் கான புரிதலுக்கு இந்த ஆய்வு நடவடிக்கை உதவ இருக்கி றது.

இதற்காக 2 கியூப்சாட் வகை செயற்கை கோள்களை விண் ணில் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனால் கடல் பனி இழப்பு, பனிக்கட்டி உருகுதல் மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவை குறித்து தெளிவான கணிப்புக ளும் காலநிலை மாற்றம் குறித் தும் அறிய உள்ளதாக நாசா ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள் ளனர். (4-5)

ரஷ்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...க்க கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான ...டக் கோரிக்கையாளர்களின் படகு!

## ...உயிரிழப்பு; சிறுவர்கள் உட்பட 38 பேர் உயிருடன் மீட்பு

...)

...கோரிக்கையாளர்களை ஏற்றிச் ...ன்று மேற்கு ஆபிரிக்காவின் கேப் ... நிர்க்கதிக்குள்ளானதில் 63 பேர் ...னர்.



...து ...ரி ...க ...யி ...ர் ...ள் ...ள்

இந்தப் படகு கடந்த திங்கட் கிழமை முதல் தடவையாக அவ தானிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படகு மூழ்கியதாக ஆரம்பத் தில் தகவல்கள் வெளியாகியிருந் தாலும் பின்னர் அது கடலில் அலைக்கழிக்கப்பட்ட நிலையில் கண்டறியப்பட்டமை உறு திப்படுத்தப்பட்டது.

ஸ்பானிய மீன்பிடி பட கொன்றினால் கண்டுபிடிக் கப்பட்ட இந்த படகு தொடர் பில் அதிகாரிகளுக்கு அறி விக்கப்பட்டதை அடுத்தே மீட்பு நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டிருந்தது.

101 பயணிகளுடன் கட ந்த ஜூலை 10 ஆம் திகதி இந்த படகு செனகலில் இரு ந்து புறப்பட்டதாக அந்நாட் டின் வெளிவிவகார அமை ச்சு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. (4-5)

## ...ள் மீது தாக்குதல் ...மற்பட்டோர் கைது



...ல் பரபரப்பு

...பில் 100 இற்கும் மேற் பட்டோர் கைது செய்யப்பட் டனர்.

தாக்குதலையடுத்து தேவாலயங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டு, நிலைமை கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வரப்பட்டது என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (4-5)

## லிபியா ஆயுதக்குழு தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை உயர்வு

(திரிபோலி)

லிபியாவின் தலைநகர் திரி போலியில் இடம்பெற்ற மோத லில் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 55 ஆக உயர்ந்துள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரிபோலியில் கடந்த ஞாயிற் றுக்கிழமை இரண்டு ஆயுதக் குழுக்களுக்கிடையில் இந்த மோதல் நிலைமை உருவாகி யது.

இத்தாக்குதல்களில் உயிரி ழந்தோர் எண்ணிக்கை உயர்ந் துள்ளதுடன் காயமடைந்தவர்க ளின் எண்ணிக்கை 150 இற்கும் அதிகமாகும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இரு தரப் பும் போரை நிறுத்த இணக்கம் தெரி வித்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. (4-5)

## பிரேசிலில் மின்சாரம் துண்டிப்பு 25 மாகாணங்கள் இருளில்!

(பிரேசிலியா)

பிரேசிலில் மின்சார சப்ளை ஆலையில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக 25 மாகாணங் களும் இருளில் மூழ்கின.



பிரேசில் நாட்டில் மின் உற்பத்திக்கு முக்கிய ஆதா ரமாக நீர் மின்நிலையங் கள் விளங்குகின்றன.

பிரேசிலில் 63 சதவீதம் மின் உற்பத்திக்கு இது வழி வகுக்குகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை நேரத்தில் நாடு முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட் டது. ரோரைமா தவிர நாட் டின் 25 மாகாணங்களும் இருளில் மூழ்கின.

முக்கிய மின்சார சப்ளை ஆலையில் ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாறு காரணமாக இந்த சம்பவம் நடந்திருக்க லாம் என சந்தேகிகப்ப டுகிறது.

எனினும் உரிய கார ணம் குறித்து நாட்டின் எரி சக்தி இலாகா இதுவரை தகவல் தெரிவிக்கவில்லை.

திடீர் மின்தடையால் நாட் டின் பொதுசேவைகள் மற் றும் கல்வி நிலையங்கள் முடங்கின. மேலும் மின்சார ரயில்கள் இயக்கம் தடைப் பட்டதால் பொதுமக்கள் அவ தியுற்றனர்.

பின்னர் பெரும்பாலான மாகாணங்களில் மின்சார விநியோகம் மீட்டெடுக் கப்பட்டது. இயல்புநிலைக்கு திரும்பும் நடவடிக்கையில் மின் வாரிய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (4-5)

## ரஷ்யா நடத்திய உச்சக்கட்ட தாக்குதல் 4 உக்ரைன் போராளிகள் உயிரிழப்பு

(மொஸ்கோ)

உக்ரைனில் இருந்து ரஷ்ய எல்லைக்குள் நுழைய முயன்ற நான்கு உக்ரைன் போராளிகள் ரஷ்யப் படைகளின் தாக்குதல் களால் உயிரிழந்துள்ளனர்.

ஆறு பேர் கொண்ட குழு ஒன்று தமது எல்லையை கடக்க முயன்ற போது உக்ரைன் உள வாளிகள் இந்த தாக்குதலை நடத் தியதாக ரஷ்யப் பாதுகாப்பு படை யினர் தெரிவித்தனர்.

முன்னதாக, உக்ரைன் போரா ளிகள் ரஷ்ய எல்லைக்குள் நுழைய முயன்ற போது, அதைத் தடுக்க ரஷ்ய பாதுகாப்புப் படையி னர் நடவடிக்கை எடுத்திருந் தனர். இதனிடையே, ரஷ்யா வால் ஆக்கிரமிக்கப்பட்ட உக் ரைனின் டொனெட்ஸ்க் பகு தியைச் சேர்ந்த கிராமம் ஒன்று அதிலிருந்து விடுவிக் கப்பட்டதாக உக்ரைன் கூறு கிறது.

மேலும் உக்ரைன் ஆயு தப் படைகளின் தலைவர் நேற்று முன்தினம் இதனை உறுதிப்படுத்தியதாக வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகத் திருவருள் நிறைந்த தெல்லிப்பழை துர்க்கை அம்பாளிற்கு இன்று கொடியேற்றம்

உலகம் முழுவதும் வாழும் சைவமக்கள் நன்கு அறிந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன்ஆலயத்தில் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குகொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 12 நாட்கள் பெருந்திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

இத்திருவிழாக் காலங்களில் பெருந்திரளாக மக்கள் வந்து வழிபடுவது வழக்கம். உள்நாட்டில் இருந்து மட்டுமன்றி புலம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் பக்தர்கள் பலர் அம்பாளுக்கு நேர்த்தி வைத்து பெருந்திருவிழாவில் பங்குபற்றுவது வழக்கமாகிவிட்டது.

ஈழத்துச் சித்தர் பாரம்பரியத்தில் மூத்த சித்தர்களில் ஒருவராகக் கருதப்படும் தெல்லிப்பழையைச் சேர்ந்த கதிர்காமர் என்று அழைக்கப்பட்ட சித்தரால் இத்திருக்கோயில் தோற்றுவிக்கப்பட்டது.

வடஇந்தியாவில் உள்ள காசியில் நீண்டகாலம் தவம் செய்த தவத்திரு கதிர்காமர், காசியில் இருந்து ஓர் துர்க்கா இயந்திரத்தையும் செப்புக் கெண்டியையும் எடுத்து வந்து தெல்லிப்பழையில் உள்ள உழுகோடைக் காணியில் இலுப்பை மரத்திற்கு அடியில் வைத்துப் பூசணை செய்து வந்தார். இற்றைக்கு 650 ஆண்டுகளுக்கு முன் அவர் உருவாக்கிய இவ்வழிபாடே இன்று துர்க்கா தேவி தேவஸ்தானமாக எழுச்சி பெற்றுக் காணப்படுகின்றது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் தர்மகர்த்தா சபையால் நிர்வகிக்கப்பட்டு, பின் அவர்களின் சிபாரிசில் நிர்வாக சபை ஒன்று உருவாக்கப்பட்டு ஆலய்த்தைப் பராமரித்து வருகின்றது.

தர்மகர்த்தா சபையில் அங்கம் வகித்தவர்களில் அமரர் நாகநாதர், Dr.P.S.சுப்பிரமணியம் போன்றவர்கள் முதன்மையானவர்கள். இன்றும் தர்மகர்த்தா சபை மரபுவழி வந்தவர்களால் தொடர்ந்தும் இயங்குகிறது.



ஆலயத்தை சீராக நடத்துவதற்கு உருவாக்கப்பட்ட நிர்வாக சபையில் தலைமைப் பொறுப்பை ஏற்று திருக்கோயிலை நெறிப்படுத்தியவர்கள் சீரிய பணியாற்றினார்கள். புகழ் பூத்த கல்வி அதிகாரியாக விளங்கிய அமரர். தியாகராசா, மகாஜன சிற்பி, அதிபர், அமரர்.ஜெயரட்ணம் மற்றும் ஆன்மிக அன்னை பண்டிதை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற பேரறிஞர்கள் ஆலயத்தை சமுதாயம் போற்றுமளவிற்கு வளர்த்தெடுத்தனர். அன்னை சிவத் தமிழ்ச்செல்வி தன் வாழ்வை அர்ப்பணித்து இன்றைய மகோன்னத வளர்ச்சிக்கு வித்திட்டார்கள்.

அவரது துர்க்காதேவி தேவஸ்தானம் கோயில் வருவாயில் தூய முயற்சியால் பொதுமக்களுக்குரிய பணிகளை நிறைவேற்றத் தொடங்கியது. 1982 இல் அம்மையார் உருவாக்கிய ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கான துர்க்காபுரம் மகளிர் இல்லம் இதற்கு தகுந்த உதாரணமாகும்.

இன்று ஐந்து திருக்கோபுரங்களோடும் அழகாகக் காட்சியளிக்கும் துர்க்கை அம்மன் ஆலயத்தின் சிறப்பை அறியாதவர்கள் எவருமில்லை. காலை 5 மணிக்கு திருப்பள்ளியெழுச்சியோடு திறக்கப்படும் கோயில் கதவு மாலை 7 மணிக்கு அர்த்தசாமப் பூசையோடு மூடப்படுகிறது.

அடியார்களின் நன்மை கருதி ஆலயம் அகலத் திறந்திருக்கின்றது. காலையில் இருந்து மாலை வரை அடியவர்கள் தொடர்ந்து அம்பாளைத் தரிசிக்கிறார்கள். தினமும் பலர் உதவி கோரி ஆலயத்திற்கு வருகின்றார்கள். அவர்களின் வேண்டுதல் பரிசீலிக்கப்பட்டு இயன்ற உதவிகள் தேவஸ்தானத்தினால் வழங்கப்படுகின்றது.

பல்கலைக்கழக மாணவர் முதல் நோயாளர்கள் வரை மாதாந்தம் உதவி பெற்று வருகிறார்கள். ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் தத்தம் கடமைகளைச் சிறப்பாகச் செய்கிறார்கள்.

ஆலய தொண்டுப் பணிகளை தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காபுரம் பெண்கள் தொண்டர் சபை, துர்க்காபுரம் மகளிர் இல்லம் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றன. வாரத்தில் இரண்டு நாட்கள் அன்னதானப் பணிகள் நடைபெறுகின்றன.

செவ்வாய்,வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் அன்னதானத்தில் ஆயிரக்கணக்கான அடியவர்கள் பங்கேற்கிறார்கள். இலங்கை வரலாற்றில் ஒரே ஒரு தேவஸ்தானம் பன்னிரு திருமுறைகளைப் பல இலட்சம் ரூபாய் செலவில் அச்சேற்றி ஆலயங்களுக்கும் சமய நிறுவனங்களுக்கும் வழங்கி வருவது என்பது துர்க்காதேவி தேவஸ்தானத்திற்குரிய சிறப்பாகும்.

அன்பர்களே! தெல்லிப்பழை துர்க்கை அம்பாளின் பெருந்திருவிழாக் காலங்களில் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வாருங்கள். அன்புச் சகோதரர்களே! சைவத்தமிழர் பண்பாட்டு உடைகளோடு வழிபட வாருங்கள்.

அன்புச் சகோதரிகளே! தலைவிரி கோலத்தைத் தவிர்த்து, வழிபாட்டுக்கு உரிய பண்பாட்டுக் கோலத்தில் வாருங்கள். திருவிழாக் காலம் அரிய தவப்பொழுது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். காலையிலும் மாலையிலும் அம்பாள் வெவ்வேறு அலங்காரங்களோடு காட்சியளிப்பாள். அத்திருவருட் காட்சியைக் காண்பதற்கு ஆவல் கொள்ளுங்கள்.

ஆலயச் சூழல்களில் ஆன்மிகம் தவிர்ந்த வேறு செயல்களுக்கு இடமில்லை. எம் மண்ணின் விடிவு கருதி ஒன்றுபட்டுப் பிரார்த்தியுங்கள். பிரார்த்தனையின் வலிமையை உணர்ந்து கொள்ளுங்கள். அம்பாள் பேரருள்பாலிக்கும் புண்ணிய நாளைத் தவற விடாதீர்கள்.அவள் இன்றி ஓர் அணுவும் அசையாது.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன்,**
**தலைவர்,**
**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.**

## பாராளுமன்ற குழு அறைகளில் மெத்தைகள்,தலையணைகள் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் குழு அறையொன்றிற்குள் இரண்டு தலையணைகளும் ஒரு மெத்தையும் காணப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தலையணைகளையும் மெத்தையையும் கொண்டு வந்தது யார் என்பது குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன.பாராளுமன்றத்தில் ஊழியர்கள் சிலர் பாலியல் தொந்தரவில் ஈடுபட்டதாக வெளியான குற்றச்சாட்டுகளை தொடர்ந்து குழு அறைகளில் சமீபத்தில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை பாலியல் தொந்தரவு குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட மூவர்குழு தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

பெண் ஊழியர்கள் உட்பட 20 பேரிடம் அந்தக் குழு வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளது.இதேவேளை இந்த விசாரணைகளை குழப்புவதற்கு பாராளுமன்ற அதிகாரிகள் குழுவினர் முயற்சி செய்வதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (4)

## மாணிக்கக் கல் ஒன்று ரூ.43 கோடிக்கு விற்பனை



(கொழும்பு)

இரத்தினபுரியில் ப்ளூ பேயா ரக மாணிக்கக்கல் ஒன்று அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

43 கோடி ரூபாவிற்கு இந்த மாணிக்கக்கல் விற்பனை செய் யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கஹவத்தை - கட்டங்கே பிரதேசத்தில் உள்ள சுரங்கத்தில் இருந்து இந்த மாணிக்கக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணிக்கக்கல் 99 கரட் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.பெல்மடுல்லை பிரதேசத் தைச் சேர்ந்த மாணிக்கக்கல் வர்த்தகர் ஒருவரினால் 43 கோடி ரூபாவுக்கு இந்த மாணிக்கக்கல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பி)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னாரைச் சேர்ந்த ஹற்றன் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் கடமையாற்றும் பொலிஸ் கொஸ்தபல் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை மன்னாரில் வைத்து பொலிஸ் புலனாய்வு துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.அவரது உடைமையில் இருந்து 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வரும் நிலையில் குறித்த நபரை விசாரணைகளின் பின் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-285)



**லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் கௌரவ ஹரேந்திர காரியவம்சம் அவர்களுக்கு கலாபூஷணம் யாழ்.பரீட் இக்பால் சிங்கள மொழி பெயர்ப்புடன் புனித குர்ஆன் பிரதி வழங்குவதை படத்தில் காணலாம். அருகில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் கௌரவ செந்தில் வேலவர் அவர்களும் காணப்படுகின்றார்.**

(16743)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவியின் பரதநாட்டிய அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் மாணவியும் நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவியுமான செல்வி நியோமி வெலிஜியா வில்சனின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை19 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெற வுள்ளது.

இவர் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடனக் கலையைப் பயின்று அரங்கேற்றத்தை மேற்கொள்கின்ற எட்டாவது மாணவியாவார்.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் உப அதிபர் அருட்பணி செ.அன்புராசா அடிகள் தலைமையில் நடைபெற வுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி குரு ஷேத்திரம் நடனாலயத்தின் இயக்குநர் செல்வி பேரின்ப நாயகி சிவகுரு கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4-6)

# மணல் ஏலவிற்பனை


(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதியன்று காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க மணல் ஏல விற்பனை நடைபெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான மணலினை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# கால்நடைகளின் உறைவிடமாக முல்லைத்தீவு பேருந்து கட்டடம்

(அக்கராயன்)



முல்லைத்தீவு பேருந்து நிலையத்திற்கு 2 ஆம் கட்ட நிதி கிடைக்காததன் காரணமாக பேருந்து நிலைய கட்டடம் தற்போதும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது.

கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் முல்லைத்தீவு பேருந்து நிலையக் கட்டடம் அமைக்கப்பட்ட போதிலும் பேருந்து நிலையத்தில் போதிய வசதிகள் காணப்படாததன் காரணமாக பேருந்துகள் இக்கட்டடத்தினை பயன்படுத்த முடியாத நிலையில் கால்நடைகள், பறவைகளின் உறைவிடமாக தற்போதும் காணப்படுகின்றது.

இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் ஆராயப்பட்ட போதிலும் தீர்வு கிடைக்கவில்லை என பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. (4-6-350)

# வவுனியா இரட்டை கொலை சம்பவம் குற்றவாளிகளின் வாகனங்கள் மீட்பு

(குருமன்காடு)

வவுனியாவை அதிர வைத்த இரட்டைக் கொலை வழக்கின் சந்தேகநபர்கள் பயன்படுத்திய வாகனங்கள் குற்ற புலனாய்வுத் திணைக் களத்தினால் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு ஒன்றில் நுழைந்து தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் உட்பட ஆறு சந்தேக நபர்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள நிலையில் தலைமறைவாகியுள்ள பிரதான சந்தேக நபருக்கு சொந்தமானதும், குறித்த குற்றச்செயலுக்கு பயன்படுத்தியதாகவும் சந்தேகிக்கப்படும் வாகனங்கள் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், குற்றப்புலனாய்வு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது டிப்பர், பட்டாரக வாகனம் மற்றும் இரண்டு மோட்டார்சைக்கிள் என்பன நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளன. கைப்பற்றிய வாகனங்களை நீதிவான் முன்னிலையில் மன்றுக்கு முற்படுத்தியுள்ளனர். (4-6-250)

# இலங்கைச் சிறப்பிதழ் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

இனிய நந்தவனம் மாத இதழ் நிறுவனத்தினரால் வெளியிடப்படவுள்ள " இலங்கைச் சிறப்பிதழ்" அறிமுக விழா, யாழ்ப்பாணப் பொது நூலக மாநாட்டு மண்டபத்தில்நாளை சனிக் கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெற வுள்ளது.

நிகழ்வில் இதழ் அறிமுக உரையை எழுத் தாளர் லதா கந்தையாவும் ஏற்புரையை இதழாசிரியர் நந்தவனம் சந்திரசேகரனும் ஆற்ற வுள்ளனர். (4)


## பெயர் மாற்றம்

மகேந்திரன் சசித்குமார் ஆகிய நான் எனது பெயரினை இன் றில் இருந்து சஜித் ஷா என மாற்றம் செய்கின்றேன். எதிர்வரும் காலங்களில் அனைத்து ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என சகல இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

சஜித் ஷா (16742)


# திருமுறிகண்டி மதுபானசாலை; போராட்டத்திற்கு தயாராகும் மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு திருமுறிகண்டியில் மாவட்ட அனுமதிகள் எவையுமின்றி உணவகத்துடன் கூடிய மது விற்பனை நிலையத்திற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 15 நாட்களுக்கு முன்னர் திருமுறிகண்டியில் குறித்த மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது. திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் 565 குடும்பங்கள் வாழ்கின்றன. அறிவியல்நகர் பல்கலைக் கழகம், ஆடைத் தொழிற் சாலைகள், ஆலயங்கள், பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதியில் இம்மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

திறக்கப்பட்டுள்ள மது விற்பனை நிலையம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்ட போது மாவட்டச் செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஆகியவற்றில் இருந்து எவ்வித அனுமதிகளும் வழங்கப்படாத நிலையில் மத்திய சுற்றாடல் அமைச்சின் அனுமதியுடன் இம் மது விற்பனை நிலையம் திறந்து இயங்கி வருகின்றதுடன் மக்கள் நடமாட்டம் அதிகம் காணப்படும். குறித்த இடத்தில் பொருத்தமற்ற மது விற்பனை நிலையம் அமைந்திருப்பதன் காரணமாக குறித்த மது விற்பனை நிலையத்தினை இடமாற்றுமாறு தொடர்ச்சியான போராட்டம் ஒன்றிற்கு திருமுறிகண்டி கிராம மக்களும் பொது அமைப்புகளும் ஏற்பாடு செய்து வருகின்றன. (4-6- 350)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 380 | 500 |
| தக்காளி | 200 | 260 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 200 | 300 |
| கோவா | 280 | 250 | 280 | 300 |
| கரட் | 400 | 520 | 500 | 500 |
| பூசணி | 120 | 120 | 120 | 120 |
| புடோல் | 80 | 80 | 120 | 150 |
| வாழைக்காய் | 180 | 180 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 150 | 180 |
| பாகற்காய் | 450 | 350 | 400 | 400 |
| வெண்டக்காய் | 80 | 70 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| பயற்றங்காய் | 300 | 400 | 400 | 300 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 250 |
| பீற்றூட் | 120 | 160 | 150 | 160 |
| கறிமிளகாய் | 350 | 400 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 300 | 300 |
| போஞ்சி | 420 | 450 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 160 | 200 | --- | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 20 | 40 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 100 |


## பதவி வெற்றிடம்- வெளிவாரி

வவுனியா வடக்குப் ப.நோ. கூ. சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவிவெற்றிடத்திற்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளதால், தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு விண்ணப்பத்தினை தலைவர், வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கம், நெடுங்கேணி எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ 11.09.2023 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(01) பதவி - பொது முகாமையாளர்

சம்பள குறியீட்டு இல : 101/07

சம்பள அளவுத்திட்டம் :- 18835x245x10-265x10=23935.00 இதரபடிகளும் வழங்கப்படும்.

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ)கூட்டுறவு ஊழியர் 08 ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ)கூட்டுறவு ஊழியர் உயர்தரபத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 05 வருட கால அனுபவம். அல்லது க.பொ.த.(உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் எட்டு (08) வருட கால அனுபவம்.

(சி-7084)

தலைவர், வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 259





“அரசே! இது என்ன பேச்சு? தாங்கள் ஏன் சாக வேண்டும்? எனக்கு அனுமதி கொடுங்கள். இலங்கைக்கு அப்புறம் போகிறேன். உடனே தஞ்சாவூர் சென்று அவளைக் கொன்றுவிட்டு வருகிறேன். ஸ்திரீ ஹத்தி தோஷம் என்க்கு வந்தால் வரட்டும்.”

“அப்படி ஏதாவது செய்தால் உன்னை என் பரம வைரியாகக் கருதுவேன். நந்தினியைக் கொல்லத்தான் வேண்டுமென்றால் என்னுடைய இந்தக் கையினாலேயே அவளைக் கொல்லுவேன். கொன்றுவிட்டு என்னையும் கொன்று கொண்டு மாளுவேன். வேறொருவர் அவளுடைய சுண்டு விரலின் நகத்துக்குக் கேடு செய்வதையும் என்னால் பொறுக்க முடியாது. நண்பா! நீ நந்தினியை மறந்துவிடு. அவளைப் பற்றி நான் சொன்னதெல்லாவற்றையும் மறந்துவிடு. பாட்டன் சொன்னபடி நீ நாளைக்கே புறப்பட்டு இலங்கைக்குப் போ! என் சகோதரன் அருள்மொழியை எப்படியாவது வற்புறுத்தி இங்கே அழைத்து வா. அவனை இங்கே இருக்கச் செய்வோம். பாட்டனும் பேரனும் யோசித்து என்ன வேணுமோ செய்து கொள்ளட்டும். நாம் இலங்கைக்குச் செல்வோம். மீண்டும் கப்பல் ஏறிப் பெரும் படையுடன் கீழைக் கடல்களில் செல்வோம். சாவகம், புஷ்பகம், கடாரம் முதலிய தேசங்களுக்குச் சென்று வெற்றிக் கொடி நாட்டுவோம். பிறகு மேற்கே திரும்புவோம். அரபு, பாரஸீகம், மிசிரம் முதலிய நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் தமிழர் வீரத்தையும் புலிக் கொடியையும் நிலைநாட்டுவோம். பார்த்திபா! அந்த நாடுகளில் எல்லாம் கற்பு என்னும் கட்டுப்பாடு இந்த நாட்டில் உள்ளது போல் கிடையாது என்பது உனக்குத் தெரியுமா? அரசர்கள் தங்கள் இஷ்டம் போல் அவர்களுடைய ஆட்சியின் கீழ் உள்ள எந்தப் பெண்ணையும் அழைத்துச் சென்று அந்தப்புரத்தில் சேர்த்துக் கொள்வார்களாம்” என்றான் கரிகாலன்.

பார்த்திபன் இதற்கு மறுமொழி சொல்லுவதற்குள் திருக்கோவலூர் மலையமான் அங்கு வந்து சேர்ந்தார். “அரவான் கதையைப் போல் அற்புதமான கதை இந்த உலகத்திலேயே கிடையாது. நீ இப்போது சொல்லிக் கொண்டிருந்த எந்த நாட்டிலும் கிடையாது. ஆனால் இன்னுமா நீங்கள் தூங்காமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? பார்த்திபேந்திரா! நாளைக்கு இலங்கைக்குப் புறப்பட வேண்டும் என்பது உனக்கு நினைவிருக்கிறதல்லவா?” என்றார்.

“அதைப் பற்றித்தான் தூங்காமல் பேசிக் கொண்டிருக்கிறோம்” என்றான் பார்த்திபேந்திரன்.

### பூங்குழலி

அந்தி நேரம் அமைதி பெற்று விளங்கியது. கோடிக்கரையின் ஓரத்தில் கடல் அலை அடங்கி ஒய்ந்திருந்தது. கட்டு மரங்களும் படகுகளும் கரையை நெருங்கிக் கொண்டிருந்தன. கடலில் இரை தேடச் சென்ற பறவைகள் திரும்பி வந்து கொண்டிருந்தன. கரையில் சிறிது தூரம் வெண்மணல் பரந்திருந்தது. அதற்கு அப்பால் வெகுதூரத்துக்கு வெகுதூரம் காடு படர்ந்திருந்தது. காட்டு மரங்களின் கிளை ஆடவில்லை. இலைகள் அசையவில்லை. நாலா பக்கமும் நிசப்தம் நிலவியது. செங்கதிர்த் தேவன் கடலும் வானும் கலக்கும் இடத்தை நோக்கி விரைந்து இறங்கிக் கொண்டிருந்தான். மேகத்திரள்கள் சில சூரியனுடைய செங்கதிர்களை மறைக்கப் பார்த்துத் தாங்களும் ஒளி பெற்றுத் திகழ்ந்தன.

கரை ஓரத்தில் கடலில் ஒரு சிறிய படகு மிதந்தது. கடலின் மெல்லிய அலைப் பூங்கரங்கள் அந்தப் படகைக் குழந்தையின் மணித் தொட்டிலை ஆட்டுவது போல மெள்ள மெள்ள அசைத்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பாடாதே செத்தேன்

(நேற்றைய தொடர்ச்சி)



இதைக் கேட்ட அவன் தன் வில்லில் அம்பு பூட்டிப் பறவைக்குக் குறி வைத்தான். குறி தவறவில்லை. பறவை அருகில் இருந்த புதரில் விழுந்தது.

திருடனே! அந்தப் பறவையை எடுத்துக் கொள் என்று கத்தினான் அவன்.

முள் நிறைந்த புதர் அருகே சென்றான் திருடன். பறவையை எடுப்பதற்காகக் குனிந்தான். உடனே அவன் புல்லாங்குழலை வாயில் வைத்து இசைக்கத் தொடங்கினான்.

தன்னை அறியாமல் பாட்டிற்கு ஏற்ப ஆடத் தொடங்கினான் திருடன். சிறிது சிறிதாக இசையை அதிகப்படுத்திக் கொண்டே சென்றான் அவன்.

இசைக்கு ஏற்ப திருடன் இங்கும் அங்கும் வேகமாக ஆடத் தொடங்கினான். சுற்றி இருந்த முட்கள் அவன் உடைகளைக் கிழித்தன. உடலுக்குள் தைத்து வேதனையை ஏற்படுத்தின.

திருடன் வலியைத் தாங்க முடியவில்லை. ஐயா! பாடுவதை நிறுத்துங்கள் என்று கெஞ்சினான்.

எத்தனை பேருக்கு நீ எவ்வளவு துன்பம் தந்து இருப்பாய்? யாருக்காவது இரக்கம் காட்டி இருக்கிறாயா? கொடியவனான உனக்குத் தக்க தண்டனை இதுதான், என்ற அவன் மேலும் வேகமாக இசைக்கத் தொடங்கினான்.

முட்கள் மேலும் மேலும் திருடனின் உடலைக் கிழித்தன.

ஐயா! இனிமேல் என்னால் தாங்க முடியாது. என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யமாட்டேன். நல்லவனாகி விட்டேன். நான் திருடிச் சேர்த்த இந்த பொற் காசுகளை உங்களுக்குத் தந்து விடுகிறேன். பாடுவதை நிறுத்துங்கள் என்று பரிதாபமாகச் சொன்னான் திருடன்.

நீ திருந்தி விட்டதாகச் சொல்கிறாய். பெருந்தன்மையுடன் பொற்காசுகளை எனக்குத் தருவதாகச் சொல்கிறாய். பாட்டை நிறுத்துகிறேன் என்ற அவன் புல்லாங்குழலை வாயிலிருந்து எடுத்தான்.

உடலெங்கும் குருதி சொட்டச்சொட்ட எழுந்தான் திருடன். சொன்னபடியே அவனிடம் பொற்காசுப் பையைத் தந்தான்.

அதைப் பெற்றுக் கொண்ட அவன் அங்கிருந்து மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

அவன் கண்ணுக்கு மறைந்ததும் திருடன், டேய்! அயோக்கியப் பயலே! என்னிடம் உன் வேலையைக் காட்டுகிறாயா? நீ விரைவில் கொடுமையாக இறக்கப் போகிறாய் என்று திட்டினான். குறுக்கு வழியாகப் பக்கத்தில் இருந்த நகரத்தை அடைந்தான்.

நீதிபதியிடம் சென்ற திருடன், ஐயா! நான் உழைத்துத் தேடிய பொற்காசுகளைக் காட்டில் ஒரு திருடன் பறித்துக் கொண்டான். நீங்கள் தான் மீட்டுத் தர வேண்டும் என்றான்.

அந்தத் திருடன் எப்படி இருப்பான்? என்று கேட்டார் நீதிபதி.

எப்படியும் இந்த நகரத்திற்கு அவன் வருவான். தோளில் வில், கையில் புல்லாங்குழல் வைத்திருப்பான். எளிதில் கண்டுபிடித்து விடலாம் என்றான் திருடன்.

வீரர்களை அழைத்தார் நீதிபதி. இவன் குறிப்பிடும் ஆள் கிடைத்தால் கைது செய்து இழுத்து வாருங்கள் என்று கட்டளை இட்டார்.

நடக்கப் போவதை அறியாத அவன் நகரத்திற்குள் நுழைந்தான். வீரர்கள் அவனைக் கைது செய்தனர். நீதிபதியின் முன்னர் அவனை இழுத்து வந்தனர்.

அவனைப் பார்த்ததும் திருடன் நீதிபதி அவர்களே! இவன் தான் திருடியவன் இவனிடம் என் பொற்காசுப் பை இருக்கலாம் என்று கத்தினான்.

வீரர்கள் அவனைச் சோதனை செய்தனர். பொற்காசுப் பை கிடைத்தது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல்கள் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்

– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குருந்தூர்மலைப் பொங்கல் சமாதானத்தை உரத்துக்கூறட்டும்

இன்று முல்லைத்தீவு குருந்தூர்மலையில் வீற்றிருக்கும் ஆதிசிவனுக்குப் பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளது.

ஆதிசிவன் வீற்றிருக்கும் குருந்தூர்மலையில் பௌத்த விகாரையை அமைத்து அதனைத் தங்களுடையதாக ஆக்குகின்ற முயற்சியில் பௌத்த பிக்குகள் தீவிரம் காட்டிவருகின்றனர்.

ஆட்சி அதிகாரத்தை வைத்துக் கொண்டு குருந்தூர்மலையில் விகாரை அமைக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

எனினும் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் விகாரை அமைக்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் குருந்தூர்மலை ஆதிசிவனுக்குப் பொங்கல் செய்வதைத் தடுக்கக்கூடாது எனவும் நீதிமன்றம் குறித்துரைத்துள்ளது.

இதேவேளை தொல்லியல் திணைக்களம் பௌத்த சிங்கள அமைப்புப் போல செயற்படுகின்றது.

அதன் ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் தமிழ் மக்களுக்கு எதிரானதாக இருப்பதைக் காண முடியும்.

உண்மையில் குருந்தூர்மலையில் பௌத்த விகாரை அமைக்கப்படுவதன் பின்னணியில், தொல்லியல் திணைக்களம் இருந்துள்ளதென்பது மறுதலிக்க முடியாத உண்மை.

தொல்லியல் சான்றுகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பு தொல்லியல் திணைக்களத்தினுடையதாக இருக்கலாம்.

அதற்காக தொல்லியல் அடையாளங்கள் – தொல்லியல் சான்றுகள் அனைத்தும் பௌத்தத்தைக் குறித்து நிற்பதாகத் தொல்லியல் திணைக்களம் கருதுவதுதான் மிகப்பெரும் அபத்தம்.

இவ்வாறு பௌத்த சிங்களப் பேரினவாதத்தை உசுப்பேத்தும் வகையில் தொல்லியல் திணைக்களம் நடந்து கொள்வது இந்த நாட்டில் மீண்டும் இன ஒற்றுமையைச் சிதைத்து இரத்த ஆறை ஓட வைக்கின்ற செயலாகும்.

இதற்கும் மேலாக, பௌத்த பிக்குகள் நாட்டின் சமகால நிலைமைகளைப் புரிந்து கொள்ளாதவர்களாக செயற்படுகின்றனர்.

ஆம், நாடு பொருளாதார நெருக்கீட்டில் கிடந்து தத்தளிக்கிறது. சாதாரண மக்கள் நாளாந்தச் சீவியத்துக்காகத் திண்டாடுகின்றனர். புத்திஜீவிகள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்தி, புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீட்டைப் பெற்று நாட்டை அபிவிருத்தி செய்வதும் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதும் இன்றைய அவசர தேவையாக உள்ளது.

இருந்தும் புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் பௌத்த பிக்குகள், தமிழ் மக்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களை அபகரிப்பதில் தீவிரமாகச் செயற்படுகின்றனர்.

எனவே இதுவிடயத்தில் பொலிஸார் நீதியை நிலைநாட்ட உறுதி கொள்ள வேண்டும். நீதிமன்றத்தின் உத்தரவை நிலைநாட்டுவது பொலிஸாரின் தலையாய கடமையாகும்.

அதேநேரம் குருந்தூர்மலையில் இன்று நடைபெறும் பொங்கல் அமைதியாக இடம்பெற வேண்டும். யார் குழப்புவதற்கு முற்பட்டாலும் அதற்கு இடம்கொடாமல் பொறுமையும் நிதானமும் அமைதியும் சமாதானமும் வெளிப்பட வேண்டும்.

இதன்மூலம் குருந்தூர்மலைப் பொங்கல் இன ஒற்றுமையை – சமாதானத்தை வலியுறுத்தும்.

# சில அரச திணைக்களங்கள்

## தமிழர்களின் உணர்வைப் புண்படுத்துகின்றன

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(கொழும்பு)

தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளப் பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றின் சில முறையற்ற செயற்பாடுகள் தமிழ் மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் இருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்ப்படுத்தல் தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்ப்பாக ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளிலேயே குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும் பரிந்துரைகளையும் வரவேற்றுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த முன்னெடுப்புக்கள் அர்த்தபூர்வமானவையாக அமைய வேண்டுமாயின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாக விரைவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக, தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளப் பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றின் சில முறையற்ற செயற்பாடுகள் தமிழ் மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் இருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தொல்லியல் ஆய்வு செயற்பாடுகள் அந்தந்த மாவட்டத்தினை சேர்ந்த வரலாற்றுத்துறை நிபுணர்களின் பங்குபற்றுதல் மற்றும் கலந்தாலோசனைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டுமே தவிர, தொல்லியல் திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்தில் இருக்கின்ற உயர் அதிகாரிகள் சிலரின் விருப்பு வெறுப்பு சார்ந்த முன்னெடுப்புக்களாக அமைவதை அனுமதிக்க கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைளை நிறைவேற்ற முடியும் என்ற ஈ.பி.டி.பி. கட்சியின் நீண்ட கால நிலைப்பாடு குறித்த ஆவணத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்துவதற்கு சாத்திய மான 3 கட்டப் பொறி முறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாட்டின் செயற்பாடுகள் குறித்து தூதுவர்களுக்கு அலி சப்ரி விளக்கம்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள இராஜதந்திரப் பிரதிநிதிகளுக்கு வெளிவிவகார அமைச்சு மற்றும்இலங்கை அரசாங்கம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து விளக்க மளிக்கும் நிகழ்வு நேற்று வெளிவிவகார அமைச்சில் இடம் பெற்றது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்கள் கலந்து விளக்கமளித்த இந் நிகழ்வில் கீழ்வரும் செயற்பாடுகள் விளக்க காட்சிகள் மூலம் விரிவாக தெளிவாக்கப்பட்டன.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், இலங்கையின் காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கண்டுள்ள முன்னேற்றங்களும் அவற்றை கண்டறிவதில் அண்மையில் எதிர்கொண்ட நேர் மறையான சவால்கள், வெளிநாட்டு இலங்கையர்களுக்கான உத்தேச அலுவலகத்தை (OOSLA) அமைப்பதில் அடைந்துள்ள முன்னேற்றம்.

முன்மொழியப்பட்ட திட்டமிடல் பொறிமுறைகளுக்கான பணிகள் நிறைவடைந்துள்ளன.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் (ONUR) முன்னேற்றம் மற்றும் புதுப்பிப்பு செயன்முறைகள்.

பெண்களின் அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய செயற்றிட்டத்தில் ஜனாதிபதி செயலகத்தினால் அண்மையில் பெறப்பட்ட முன்னேற்ற அடைவுகள்.

நாட்டில் நிலவிய தீவிரமான நெருக்கடியைத் தவிர்ப்பதில் முன்னோக்கி செல்லும் பாதையில் நேர் மறையானவர்களாக இருந்தமையால் கடந்த ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து தூதரகங்களின் பிரதாணிகள் இலங்கை அரசாங்கத்தைப் பாராட்டியமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யானை தாக்கியதில் புத்தளத்தில் ஒருவர் பலி

(புத்தளம்)

புத்தளம் - நவகத்தேகம பகுதியில் காட்டு யானைத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தமது வீட்டுக்கு ஈருருளியில் பயணிக்கும் போது காட்டு யானை தாக்கியுள்ளது. (ம-7)

## மது அருந்திவிட்டு பாடசாலை சென்ற 14 வயது மாணவி

(அநுராதபுரம்)

மது அருந்தி விட்டு பாடசலைக்குச் சென்ற 14 வயதுடைய மாணவி ஒருவரை கெகிராவ பிரதேச பொலிஸார் செவ்வாய்க்கிழமை (17) வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த மாணவி பாடசாலை அருகில் நின்ற போது அவரது நடவடிக்கை மீது சந்தேகப்பட்ட பொலிஸார் மாணவியை விசாரணை நடத்திய போது அவர் மது அருந்தி உள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதனையடுத்து பொலிஸார் குறித்த மாணவியை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று, பாடசாலை அதிபரிடம் வாக்கு மூலம் பெற்றுக்கொள்வதற்காக தொடர்புகொள்ள முயற்சி செய்த போது பாடசாலையில் இருந்து தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த மாணவியிடம் பொலிஸார் விசாரனை நடத்திய போது மாணவியின் தாத்தா தான் தன்னை மது பழக்கத்திற்கு அடிமையாக்கியதாக தெரிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து கெகிராவ பொலிஸார் மேலதிக நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில்** ஹைட்றாமணி, இரணைப்பாலை புதுக்குடியிருப்பு, கோம்பாவில் புதுக்குடியிருப்பு, கோம்பாவில், கே.டி.கே உணவகத்தடி, புதுக்குடியிருப்பு மருத்துவமனை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அவறந்துலாவா, நவகம்மானே, பாவற்குளம், பழையனூர், இராஜேந்திரகுளம், சூடுவெந்த புலவு கோபுரம், சூடுவெந்தபுலவு, ட்ராக் 07 - பாவற்குளம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** சீன துறைமுகம், கள்ளிக்கட்டைக்காடு, முள்ளிப்பள்ளம், நொச்சிக்குளம், சிறுநாவற்குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)


வடக்கு இலங்கை சமாதான நீதவான்கள் சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் தலைவர் லயன் கலாநிதி கா.பீ.ஜெயவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு அனைத்து சமாதான நீதவான்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

09



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அதன்பின் டொலர் அமெரிக்க அரசு வழங்கும் உறுதிமொழியை மட்டும் கொண்ட தாள் நாணயமாக மாறியது . நிக்சன் அதிர்ச்சி என அறியப்பட்ட இந்த நிகழ்வு பல நாடுகளையும் டொலரை மட்டுமே சார்ந்திருக்க வேண்டிய நிலையை உருவாக்கியது. இதுவே இன்று இருக்கும் மிதக்கும் மாற்று விகிதங்களுக்கு வழிவகுத்தது

### உலக வங்கி

பிரெட்டன் வூட்ஸ் (BRETION WOODS) ஒப்பந்தம் மூலமாக 1945 டிசெம்பர் 27 இல் உலக வங்கி உருவாக்கப்பட்டது. இதன் அடிப்படை எண்ணக்கரு 1944 ஆம்ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பணவியல் மற்றும் நிதியியல் கருத்தரங்கில் (MONETARY AND FINANCIAL CONFERENCE) பிரகடனப்படுத்தப்பட்டது. பன்னாட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி (International Bank for Reconstruction and Development -IBRD) மற்றும் பன்னாட்டு மேம்பாட்டுச் சங்கம் (International Development Association -IDA) ஆகிய இரண்டு நிறுவனாங்களை இணைத்து உலக வங்கி உருவாக்கப்பட்டது.

உலக வங்கிக் குழுமத்தில் இவற்றைத் தவிர மூன்று நிறுவனங்கள் அடங்கியுள்ளன. பன்னாட்டு நிதிக் கழகம் (IFC), பல தரப்பு முதலீட்டு பொறுப்புறுதி முகமை (MIGA), பன்னாட்டு முதலீட்டு பிணக்குகள் தீர்வு மையம் (ICSID) உலக வங்கியும் உலக வங்கிக் குழுமத்தின் பிற அங்க நிறுவனாங்களும் ஐக்கிய அமெரிக்காவின் தலைநகரான வோஷிங்டன் பிசியில் தங்கள் தலைமை அலுவலகங்களை அமைக்கப் பெற்றுள்ளன. தனி நிறுவனமான அனைத்துலக நாணய நிதியத்தையும் சேர்த்து உலக வங்கி குழுமம், சிலசமயங்களில் "பிரெட்டன் வூட்ஸ் நிறுவனாங்கள்" என அழைக்கப் பெறுகின்றன. நியூ ஹாம்சயர் மாநில, பிரெட்டன் வூட்ஸில் நடந்த ஐக்கிய நாடுகளின் செலாவணி மற்றும் நிதி மாநாட்டிற்கு பிறகு (1 முதல்' 22 ஜுலை, 1944) இந்நிறுவனாங்களுக்கு இப்பெயர் கிட்டிற்று.

ஆரம்பத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வறுமையை ஒழிக்கும் நோக்குடன் அந்நாடுகளில் அபிவிருத்திச் செயற்றிட்டங்களிற்கு கடன் வழங்கும் வங்கியாக "உலக வங்கி" இருந்தது. பின்னர் பெரும்தெரு, நீர், மின்சாரம், அஞ்சல் சேவை,வடிகால் அமைப்பு செயற்றிட்டம், வைத்திய சாலை போன்ற அடிக்கட்டமைப்பின் அபிவிருத்திக்காக உலக வங்கி கடன் வழங்கியது. ஆனால் இன்று அந் நாடுகளைக் கடன் சுமைகளில் இருந்து மீட்பதற்கும் கடன் வழங்குகிறது.

இத்தகைய நாடுகள் உலக வங்கியில் கடன் பெற வேண்டுமானால் அந்நாடுகளில் உள் வர்த்தகத்திற்கான தடைகளை நீக்குதல், தனியார் முயற்சியாண்மையை ஊக்குவித்தல் வேண்டும். நிலையான அபிவிருத்தியை நடைமுறைப் படுத்துதல், வறுமையை ஒழித்தல் என்பன பிரதான இலக்குகளாகும். உலக வங்கி இலாப நோக்கமற்ற அமைப்பாகும். உலக வங்கியின் இலக்கை அடைவதற்கு இதன் பிரதான இரு நிறுவனாங்களான IBRD, IDA என்பன சர்வதேசக் கடன் சந்தைக்குச் செல்ல முடியாத நாடுகளிற்கு குறைந்த வட்டியிலும் வட்டி இல்லாமலும் கடன் வழங்குகின்றன.

இதன் தலைவர் எப்பொழுதும் ஓர் அமெரிக்கராக இருப்பதும் அனைத்துலக நாணய நிதியத்தின் தலைவர் ஐரோப்பியராக இருப்பதும் வழக்கம். இதன் செயற்பாடுகள் பல தரபட்ட சர்ச்சைகளுக்கு உள்ளாகியுள்ளது.

"முதலீடு மூலமாகவும் ஆற்றல் மூலமாகவும் வறிய மக்கள் அபிவிருத்திக் கருமங்களில் பங்கு கொள்ளவும் பொருளாதார அபிவிருத்தி, நிரந்தர அபிவிருத்தி, வேலை வாய்ப்பு முதலீட்டிற்கான சூழல் என்பவற்றின் மூலமாக மிலேனிய அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிற்கும் அதன் மக்களிற்கும் உதவுதல்." என்பதே உலக வங்கியின் இலட்சிய நோக்காகும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் வணிகத்திற்குப் பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கும் தேவையான பிரதான 4 காரணிகளை உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

1) ஆற்றலை வளர்த்தல் ( Capacity Building)

அரச உத்தியோகத்தர்களிற்கு கல்வி வழங்குதல், அரசை பலம் உடையதாக்குதல் மூலமாக ஆற்றலை விருத்தி செய்தல்.

2. உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் (Creation of Infrastructure)

ஒப்பந்தங்களை மதித்தல், மக்களையும் சொத்துக்களையும் பாதுகாத்தல், வணிகங்களை ஊக்குவித்தல் என்பவற்றிற்கு பொருத்தமான சட்ட, நீதி முறையை நடைமுறைப்படுத்துதல் விசேட அம்சமாகும்.

3. நிதி முறையை அபிவிருத்தி செய்தல் (Development of Financial System)

சிறிய அளவான வணிகங்களில் இருந்து பேரளவான கம்பனிகள் வரைக்கும் கடன் வழங்கக் கூடிய பலமான நிதி முறையை உருவாக்குதல்.

4. மோசடிகளையும் ஊழல்களையும் ஒழித்தல் (Combatting Corruption)

பொருளாதாரக் கருமங்களில் உச்ச விளைதிறனிற்காக மோசடிகளையும் ஊழல்களையும் ஒழித்தல்.

உலக வங்கி அதற்குத் தேவையான பணத்தை IBRD ஊடாக AAA எனத் தரப்படுத்தப்பட்ட (AAA Rated Bonds) பிணை முறிகளை விற்பனை செய்து திரட்டுகிறது. IBRD இன் பிரதான வருமானம் அதனிடம் உள்ள நிதியை கடன் வழங்கி பெறும் வட்டியாகும். IBRD வழங்கும் கடன்களிற்கு 0.5% - 1% வரையிலான குறைந்த சதவீத வட்டியையே அறவிடுகிறது. IDA அதற்குத் தேவையான நிதியை பிரதானமாக நிதி நன்கொடை வழங்கும் 40 நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்கின்றது. மூன்று வருடங்களிற்கு ஒரு முறை அந்த 40 நாடுகளிலிருந்து நன்கொடைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. IDA வழங்கும் கடனிற்கு எவ்வித வட்டியும் அறவிடுவதில்லை.

உலக வங்கி வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதம் குறைவு. ஆனால், அந்தக் கடனுதவியைப் பயன்படுத்துவதற்கான நிபந்தனைகள் கடினமாக இருக்கும். இதன் மூலம்தான் மற்ற நாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். உலக வங்கி, அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதால் பெரும்பாலும் அமெரிக்காவின் திட்டத்தையே இது செயற்படுத்தும்.

வீதிப் பயன்பாட்டை சமூக நோக்கில் பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. அதைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்டு வந்த "பெருமை" உலக வங்கியையே சாரும்.

அமெரிக்கா தவிர ஜப்பான், சீனா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் இதில் முக்கிய பங்களிப்பு தருகின்றன.

கடன் வசதிகளை வழங்குவதற்கு மேலாக உலக வங்கி குறை விருத்தி நாடுகளிற்கு ஆய்வு ஆலோசனைச் சேவைகளையும் வழங்குகிறது. நீண்டகால சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான வசதிகளை வழங்குகிறது. அத்துடன் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொள்ளவும் உதவுகிறது. அங்கத்துவ நாடுகள் கடனுக்கு விண்ணப்பிக்கும் செயற்றிட்டங்களின் பொருளாதார, நிதி, சமூக, துறை தொடர்பான இயலுமை ஆய்வுக்குப் பின் வழங்கப்படும் கடனின் அளவு தீர்மானிக்கப் படுகிறது.

அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் ஒரு மறைமுகமான புரிந்துணர்வை அடிப்படையாகக் கொண்டு பாரம்பரியமாக, எப்போதும் அமெரிக்கா பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளர்களிடமிருந்து உலக வங்கியின் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

2012 இல் முதல் முறையாக, இரண்டு அமெரிக்க அல்லாத குடிமக்கள் பரிந்துரைக்கப்பட்டனர். மார்ச் 23, 2012 அன்று, அமெரிக்க ஜனாதிபதி பாராக் ஒபாமா தென் கொரிய நாட்டைச் சேர்ந்த ஜிம் யோங் கிம்யை உலக வங்கியின் அடுத்த தலைவராக அமெரிக்கா நியமிக்கும் என்று அறிவித்தார். ஜிம் யோங் கிம் 27 ஏப்ரல் 2012 இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜிம் யோங் கிம் உலக வங்கியின் 12 ஆவது தலைவர் ஆவார். 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் 27 ஆம் நாள் இவர் உலக வங்கியின் தலைவராக 1 ஜுலை, 2017 முதல் உள்ள ஐந்தாண்டு காலத்திற்கு மறுநியமனம் செய்யப்பட்டார். ஜிம் யோங் கிம் தனது பதவிக்காலம் நிறைவடையும் முன்னரே 2019 ஆம் ஆண்டு ஜனவரியில் பதவி விலகினார். அவரைத் தொடர்ந்து டேவிட் மால்பாஸ் உலக வங்கியின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

இந்த வருடம் டேவிட் மல்பாஸ் உலக வங்கியின் தலைவர் பொறுப்பில் இருந்து விலகி கொள்வதாக அறிவித்தார். அவரது பதவிக்காலம் முடியும் முன்பே அந்த பொறுப்பில் இருந்து விலகுவதாக அவர் தெரிவித்தார். சென்ற யூன் 1 ஆம் திகதி தனது பொறுப்பில் இருந்து விலகி கொண்டார்.

இந்நிலையில் தான் உலக வங்கியின் தலைவராக இந்திய வம்சாவழியை சேர்ந்த அஜய் பங்காவை உலக வங்கியின் தலைவராக்க 25 உறுப்பினர்கள் கொண்ட குழு அங்கீகரித்திருந்தது. அதாவது உலக வங்கியின் 25 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழு அடுத்த 5 ஆண்டுக்கான தலைவராக அவரை அங்கீகரித்துள்ளது.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை மாபெரும்...

நிலையமானது தம்மிடம் பதிவு செய்த ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரிகள் மற்றும் ஏனைய தராதரங்களையுடைய தொழில் தேடுவோருக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நாளை 19ஆம் திகதி சனிக்கிழமையன்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்தில் தொழிற்சந்தை நிகழ்வினை நடத்தவுள்ளது.

இத்தொழிற்சந்தை நிகழ்வில் 50 இற்கு மேற்பட்ட தொழில் வழங்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தமக்கான ஆளணியினரை தெரிவு செய்யவுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள, கணனித்துறை, ஹோட்டல் முகாமைத்துவம், கணக்கியல், ஆடைத்தொழில், ஊடகத்துறை, காப்புறுதித் துறை, நிர்மாணத் துறை, சிறு தொழில் மற்றும் சுய தொழில் ஊக்குவிப்பு நிறுவனங்கள், அரச தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தனியார் மருத்துவத் துறை போன்ற பல்வேறுபட்ட நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ள இத்தொழிற்சந்தையில் தொழில் வாய்ப்பற்றிருக்கும் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு தமக்கான தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களை மாவட்டத் தொழில் நிலையத்தில் நேரடியாகவோ அல்லது 021 221 9359 என்ற அலுவலக தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்பு கொண்டு இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (நி-5,6)

## கிளிநொச்சியில்...

மாக நீரில்மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104,316)

## வவுனியாவில்...

குறித்த விபத்து தொடர்பாக தெரிய வருகையில்,

வவுனியாவில் இருந்து ஈரப்பெரிய குளம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து இடம் பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளதுடன் வாகனத்தின் சாரதி சிறு காயங்களிற்குள்ளாகினார். (ம-7, 250)

## குருந்தூரில்...

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் நேற்று யாழ்.ஆரியகுளம் நாக விகாரையில் தென்னிலங்கை பௌத்த பிக்குகளும் - சிவசேனை உள்ளிட்ட சில சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், குருமார்களும் இரகசிய கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே பௌத்த இந்து அமைப்புகள் இதனை அறிவித்தன.

இக்கலந்துரையாடலில் ஆரிய குளம் நாக விகாராதிபதி, குருந்தூர் மலை விகாராதிபதி, தையிட்டி விகாராதிபதி, நாவற்குழி விகாராதிபதி உள்ளிட்ட சைவ இந்து அமைப்புகள் பலவும் கலந்துகொண்டன. (ம-7,33,104)

## வவுனியா பல்...

பல்கலைக்கழக துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் மீது இறந்த மாணவர்களது உறவினர்களால் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்விடத்தில் பல்கலைக்கழக மாணவர்களும் அதிகமாக பிரசன்னமாகி இருந்தமையால் இரு பகுதியினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படவும் ஊடகவியலாளர்கள், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், இணைந்து இருதரப்பினரையும் சுமூக நிலைக்கு கொண்டுவந்திருந்ததுடன் துணைவேந்தரை பாதுகாப்பாக அப்பகுதியிலிருந்தும் அழைத்துச் சென்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104,250)

## வவுனியாவில் நீரில்...

மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

வவுனியா பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்பதற்காக சென்ற மாணவர்களே உயிரிழந்துள்ளனர்.

மைதானத்திற்கு அருகிலிருந்த ஆழமான நீர் நிறைந்த கிடங்கில் பாடசாலை மாணவர்கள் இருவரும் தவறி வீழ்ந்துள்ளனர்.

இதில் வவுனியா பட்டானிச்சூரை சேர்ந்த தரம் 9 இல் கல்வி கற்கும் நசார் மொகமட் ரிவாவன் (வயது-14), தரம் 10இல் கல்வி கற்கும் நிசார் அகமட் ரியான் (வயது-15) என்ற மாணவர்களே உயிரிழந்தவர்களாவர். (ம-7,33,104,250)

## பொங்கலுக்கு...

சுவரொட்டிகள் பல்வேறு இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழர்களின் இந்த பொங்கல் வழிபாட்டை தடுக்க சிங்கள பௌத்தர்கள் குருந்தூர்மலை நோக்கி வாருங்கள் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வெலிஓயா பிரதேசத்தில் உள்ள சிங்கள கிராமங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு சிங்கள பௌத்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டியில் "பௌத்தர்களே எழுந்திருங்கள்", "குருந்தி நிலத்தை காப்பாற்றுவோம்" "ஓகஸ்ட் 18 ஒன்று கூடுவோம்" என எழுதப்பட்டுள்ளது.

அதேவேளை "குருந்தி விகாரை" முகநூல் பக்கத்திலும் குறித்த சுவரொட்டிகள் பகிரப்பட்டு பொங்கல் நிகழ்வை குழப்ப பாரிய திட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பொங்...

லாத கற்களைப் பயன்படுத்தி அடுப்பு தயார் செய்து அதில் பொங்கல் சமைப்பதில் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு ஆட்சேபனை இல்லை.

ஆனால் குறித்த இடம் தொல்பொருளியல் பாதுகாப்பு காப்பக இடமாக உள்ளதுடன் வன பாதுகாப்பு துறைக்கு சொந்தமான வனப்பகுதியாக காணப்படுவதனால் இந்த இடத்தில் தீ மூட்டும்போது வன பாதுகாப்பு துறையின் சட்ட விதிகள் மற்றும் விதிமுறைகளின்படி செயற்பட வேண்டும்.

2. தொல்பொருளியல் எச்சங்கள் மேற்பரப்பில் காணப்படாததும், நிலம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலும் நினைவுச் சின்னங்களில் இருந்து விலகி தொல்லியல் துறை அதிகாரிகளால் குறிக்கப்பட்டு சுட்டிக்காட்டப்படும் இடத்தை மட்டுமே இதற்காக பயன்படுத்த வேண்டும்.

3. அகழ்வு செய்யப்பட்ட எல்லைகளில் உள்ள தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் அபாயகரமான நிலையில் இருப்பதால் அதன் எல்லை, அரண்களில் நடக்கவேண்டாம்.

4. அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் மீது உணவு, பழங்கள், திரவப்பொருட்கள், தேங்காய் போன்றவற்றை நேரடியாக வைக்க வேண்டாம்.

5.தொல்பொருட்கள் மீது தேங்காய் உடைத்தல் அல்லது பால் போன்ற திரவப்பொருட்களை தெளித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

6. திருவிழா நடவடிக்கையால் தொல்பொருளியல் இடம், நிலத்திற்கு கீழ் உள்ள தொல்பொருட்கள் மற்றும் அதன் கட்டமைப்புகளிற்கு எவ்வித மான சேதமும் ஏற்படக்கூடாது.

7.பொங்கல் பண்டிகைக்காக கூடும் மக்களால் இடத்தை வழிபடவரும் மற்றத் தரப்பினருக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும் என்பனவாகும். (ம-7)


மெகா பவர் — திகதி 17/08/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1557 — A 14 21 35 39 51 — 60238

தன நிதானய — திகதி - 2023.08.17 — சீட்டிழுப்பு இலக்கம் - 1239 — B 11 16 25 33 B — 32325

Lucky 7 லக்கி — திகதி 17.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0035 — L7. இலக்கம் 3 3 — வெற்றி இலக்கினம் மேடம் — வெற்றி இலக்கங்கள் 5 7 8 9 5 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3451 — சீட்டிழுப்பு திகதி 17.08.2023 — K 01 38 64 75 — K 51287

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.08.17 — சீட்டிழுப்பு இலக்கம் 518 — விருச்சிகம் 20 24 48 54 விருச்சிகம்

மஹஜன சம்பத — திகதி 2023/08/17 — சீட்டிழுப்பு இலக்கம் 5209 — J 8 3 5 1 0 5

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2183 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2023.08.17 — தினம் வியாழக்கிழமை — 15 26 50 51 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,553,444.40 — "இரண்டாம் வரம்" 16 27 42 74 M

சனிதா — திகதி 2023.08.17 — வெற்றி வாரம் 4344 — வர்ணம் சிவப்பு — 03 28 52 65 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,558,420.00 — "இரண்டாம் வரம்" 01 38 46 71 F

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3895 — வர்ணம் கபிலம் — சீட்டிழுப்பு திகதி 2023.08.17 — தினம் வியாழக்கிழமை — 07 12 37 59 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,527,072/- — "இரண்டாம் வரம்" 13 41 44 55

கப்ருக — திகதி 2023.08.17 — வெற்றி வாரம் 1359 — வர்ணம் ஆரஞ்சு — D 23 03 06 29 53 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 429,286,504.20 — "இரண்டாவது வாய்ப்பு" 01 16 43 59 M — DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

சங்வர்தன வாசனாவ — உத்தியோகபூர்வ முடிவுகள் — வெற்றி வாரம் 620 — திகதி 2023-08-17 — வர்ணம் நீலம் — E 10 55 67 03 — எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,255,200.00 — DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம்: 2009 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,191,984/- — 20 33 61 75 D — "இரண்டாம் வரம்" 30 36 40 71 P


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மைல் நீந்திய 56 வயதுப் பெண்



ஒரு கடல் மைல் தூரம் நீந்தி 56 வயது பெண் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

வடமராட்சி வடக்கு இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 67வது ஆண்டு விழாவும், காண்டீபன் விளையாட்டு கழகத்தின் மாபெரும் விளையாட்டுப் போட்டியும் நேற்று இடம்பெற்றது.

இதில் பெண்களுக்கான ஒரு கடல் மைல் நீச்சல் போட்டி இடம்பெற்றது.

இதில் நான்கு பிள்ளைகளை கொண்ட 40வயதுபெண்மணி முதலாமிடத்தையும், மூன்று பிள்ளைகள் இரண்டுபேரப்பிள்ளைகளைக் கொண்ட 44வயதுபெண்மணி இரண்டாமிடத்தையும் கடலில் நீந்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்

நான்கு பேரப்பிள்ளைகள் ஆறுபிள்ளைகளையுடைய 56 வயதான பெண்மணி ஒரு கடல்மைல் தூரத்தை நீந்திக் கடந்து மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டார். (மு-7.60)


## வீடு வாடகைக்கு

நாவற்குழி சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் அடங்கிய வீடு வாடகைக்கு உண்டு (16749)

077 339 9072

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16686)

076 825 7716 (ஆகாஸ்)

## இலங்கைச் சிறப்பிதழ் அறிமுகம்

இனிய நந்தவனம் (Aug-2023) இலங்கைச் சிறப்பிதழ் யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் 19/08/2023 சனி மாலை 3.30 இற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட இருக்கிறது.எல்லோரும் வருகை தந்து பிரதிகளைப் பெற்றுச் செல்லலாம். (16738)

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு

யாழ்ப்பாவாணன் (070 344 5441)

## காணி விற்பனைக்கு

பளை புலோப்பளையில் வீதி அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. வயலும் விற்பனைக்கு உண்டு. (16728)

076 564 7848

## வேலை வாய்ப்பு

உரும்பிராயில் இயங்கி வரும் Super Market ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

Billing Cashier - பெண்கள் (Full Time)

வயது எல்லை : 22-30 (16730)

சுயவிபரக் கோவையை 077 121 5548 Whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. 077 121 5548

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/= (16349)

T.P:077 544 8503

## கடைக் கட்டடம் வாடகைக்கு

யாழ்.ஸ்ரான்லி வீதி, 65/21 (பழைய தபாற் கந்தோர் வீதி) கடைக்கட்டடம் வாடகைக்கு கொடுக்கப்படும். (C-7081)

தொடர்புகளுக்கு:

076 315 6470

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு நிலப்பரப்பு

- மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 K மீற்றர் தூரம்
- நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை (5 இலட்சம் ரூபாய்)
- பின் பக்கம் உள்ள காணி 1 பரப்பு 250,000 (இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) மட்டும்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று

(16746)

076 057 0354, 076 826 0354

## WORK IN UK

WORK PERMITS

CONSTRUCTION WORKERS

- 5 YEAR WORK PERMITS
- ✓ BRICK LAYERS ✓ SHUTTERING CARPENTERS
- ✓ SHUTTERING JOINERS ✓ STEEL FIXERS
- ✓ ELECTRICIANS ✓ PLUMBERS
- ✓ STEEL ELECTORS FOR STRUCTURES

CIMS COLLEGE 0777-068-777

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7087)

0777-068-777

49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்

V2 TRAVELS


## சிவபதப்பேறு குறித்த அறிவித்தல்

சிவபூமியில் 28 - 02 - 1940



சிவபுரத்தில் 15 - 08 - 2023

### சிவத்திரு. சின்னப்பு கந்தசாமி

நாவலடி கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிசுத்தாராம வீதி வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிவத்திரு. சின்னப்பு கந்தசாமி அவர்கள் 15.08.2023 செவ்வாய்க்கிழமை ஆடித்திங்கள் தேய்பிறை பதினான்மைப் பிறைநாளில் கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சின்னப்பு - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணபிள்ளை, தில்லைநாயகி மற்றும் பூமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருகனும் சரோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும் நிவேதாதேவி(வகுப்பாய்வாளர்-நியூசிலாந்து), கயந்தினி(பொறியியலாளர்-அவுஸ்திரேலியா)" ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாரூபன்(பொறியியலாளர்-நியூசிலாந்து), பகிராஜ் (மருத்துவர்-அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அம்பை, மாதுமை, சுரபி மற்றும் அதிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.08.2023 சனிக்கிழமை வெள்ளவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் வெள்ளவத்தை இல்லத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

74/10, சுவிசுத்தாராம வீதி,
கொழும்பு 06,
வெள்ளவத்தை. (C-7088)

தகவல் - குடும்பத்தினர்
+94718434585, +94777173779,
+94772013656


JSAC

## JAFFNA SOCIAL ACTION CENTER

### IMMEDIATE VACANCY FOR THE POST OF ACCOUNTANT

Work Station: Jaffna

QUALIFICATIONS :

- Degree or Diploma in Finance/Accounting.
- Excellent interpersonal & liaison skills with very good command of English and communication skills roficiency with excellent interpersonal & liaison skills
- Minimum 5 years experience as an Accountant/ Finance officer in NGO sector
- Good analytical skills & knowledge of MS office
- Experience with accounting packages (Quickbook - Mandatory)
- Able to work in a multicultural setting and able to deal with multiple donor accounting systems
- Willing and able to travel to all parts of the country (essential)

Apply on or before 25th August 2023

Send your CV and cover letter with two non-related referees

e-mail:
jsacjaffna@gmail.com

Post:
Coordinator,
Jaffna Social Action Center.
No 18/1, Kailasapillaiyar Kovil Road, Nallur

(C-7086)

Only the short listed candidates will be contacted. Individuals of all ethnic backgrounds are encouraged to apply. As an equal opportunity employer, JSAC strongly encourages applications from women.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org